வார இதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM දේසියම්


மலர்: 01 | இதழ்: 09 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 18.10.2023 - 24.10.2023 | பக்கங்கள்: 12 | ஊக்குவிப்பு: 80/=

WELLA HAIR DRESSING

WELLA வெலா சலூன்

Ladies & Gents

FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.

Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023



## வட, கிழக்கு ஹர்த்தால்

# நோகாத போராட்டங்களால் தமிழ்க் கட்சிகள் சாதிக்கப்போவது என்ன?

பக்கம் 10



## மயிலத்தமடு விவகாரம் தீர்வு கிடைக்காவிட்டால் போராட்ட வடிவம் மாறும்

சாணக்கியன் கடும் எச்சரிக்கை

பக்கம் 10



## ‘விஜய்’ படத்திற்கு தி.மு.க அரசு திட்டமிட்ட நெருக்கடி



## ஈழத்தில் இந்தியப் படையின் ரணகளம்

## மொசாட்டை திணரடித்த ஈரூடக தாக்குதல்!

ஹமாஸின் அல்- அக்ஸா ஏவுகணை புயல்!!



மாண்புமிகு மலையக நடைப்பயணம்

## மலையக கல்விக்கு கூறுவது என்ன?





ROLEX HOTEL

340, Hospital Road, Jaffna.
Tel: 021 222 2808

360, Galle Road, Wellawatte, Colombo 06
Tel: 011 236 0462

rolex.hotel@yahoo.com

ROLEX HOTEL





## மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம்:

▶ செல்வி வினாயகமூர்த்தி

# 32 நாட்கள் கடந்தும் பண்ணையாளர்கள் போராட்டம்

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதானமாக பேசும்பொருளாக மாறியிருக்கும் விடயம் மயிலத்தமடு மாதவணை மேச்சற்தரை விவகாரமாகும்.

இலங்கையில் யுத்தம் மௌனிக்கப்பட்டு 14ஆண்டுகள் கடந்தாலும் தமிழ்மக்கள் தாம் வாழும் தமிழ் தேசிய பரப்பினுள் போராட்டமே தமது வாழ்வாகிப்போன நிலையில் தினம்தோறும் பல்வேறுபட்ட பிரச்சனையை எதிர் நோக்கி வருகின்றனர்.

பொதுவாக அண்மைக் காலங்களில் இனமுரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும் விவகாரங்களும் நில, பண்பாடுகள் ஆக்கிரமிப்புகளும் சிங்கள பௌத்தமயமாக்கல் என பல்வேறுபட்ட பிரச்சனைகள்தமிழ் தேசியப்பரப்பினுள் பேசும் பொருளாக கூர்மைப்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் வாழ்வுடமைகளை கேள்விக்குட்படுத்தியுள்ளது.

அந்த வகையில் மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவணை மேச்சற்தரை விவகாரம் பெரும் பேசும் பொருளாக மாறியிருப்பதுடன் 31 நாட்களையும் கடந்து தமது வாழ்வாதாரத்துகான மேச்சற்தரையினை கோரியும் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் நடவடிக்கைகளை நிறுத்தக்கோரியும் அப்பகுதி பண்ணையாளர்கள் தமக்கான தீர்வு கிடைக்கும் வரை சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

மயிலத்தனை மாதவனை மேய்ச்சல் தரை எனப்படுவது மட்டக்களப்பின் எல்லையில் மதுறு ஓயாவின் கிளையாகிய மாந்தரி ஆற்றை எல்லையாகக் கொண்ட ஒரு செழிப்பான மேச்சல் நிலம் ஆகும்.மயிலத்தமடு பிரதேச காணியானது கோரளைப்பற்று தெற்கு மற்றும் ஏறாவூர்பற்று ஆகிய இரு பிரதேசசெயலாளர் பிரிவுட்குட்பட்ட காணிகளாகும். இவற்றுள் ஏறாவூர் பற்றினுள் சுமார் 4000 ஏக்கர் காணிகளும் கோரளைப்பற்று தெற்கில் சுமார் 1000ஏக்கர் காணிகளும் அடங்களாக மயிலத்தமடு பண்ணையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.ஏனைய பகுதி மேச்சற்தரை அற்ற பாரிய காட்டுப்பகுதிகளாக காணப்படுகின்றன..இந்த 5000 ஏக்கர் நிலப்பரப்பானது பாரியதொரு அரசியல் பின்புலத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வரும் குடியேற்றமும் பயிர்செய்கைக்கென

> மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்தவரையில் தேசியம் சார்ந்து இரு அரசியல்வாதிகளும் அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூவரும் உள்ளனர். மயிலத்தமடு மாதவணை மேச்சற்தரை விவகாரம் தொடர்பில் அம் மக்களை சந்தித்து வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும் இதுவரையில் பண்ணையாளர்களுக்கான நிரந்தர தீர்வு என்பது எட்டப்படவில்லை என்பது வேதனையே.

அடாவந்தியாக பிடிக்கப்பட்டு நாளாந்தம் சுருக்கப்பட்டு வருவதுடன் பண்ணையாளர்களது உடமைகளும் நாளுக்கு நாள் எரிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டு வருவதுடன் பண்ணையார்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் பண்ணையாளர்கள் தங்களது கால்நடைகளையும் கால்நடை மேய்ப்பில் ஈடுபட்டு வரும் பண்ணையாளர்களையும் பாதுகாப்பதென்பது பாரிய சவாலானதொன்றாகவும் அபாயகரமான ஒன்றாகவும் தற்பொழுது மாறிவருகின்றது.

தமது மேச்சல் தரையை ஆக்கிரமித்திருக்கும் ஆக்கிரமிப்பாளர்களின்பயிர்களை மாடுகள் மேயும் பொழுது அல்லது அப்பகுதி காடுகளுக்குள் மாடுகள் ஊடறுத்து செல்லும் பொழுது ஆக்கிரமிப்பாளர்களினால் மாடுகள் பிடிக்கப்



படுவதாகவும் அல்லது கொல்லப்படுதல் அல்லது காணாமல் ஆக்கப்படுதல் போன்ற செயற்பாடுகள் அதிகளவில் ஆக்கிரமிப்பாளர்களால் மேற்கொள்ளப்படுவதாக பண்ணையாளர்கள் கூறுகிறார்கள்.அவ்வாறு இதுவரையில் சுமார் 5000 மாடுகள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

பொதுவாக மேச்சல் தரையை ஆக்கிரமிப்பது என்பது கிழக்கின் பொருளாதாரத்தை அழிக்கும் ஒரு நடவடிக்கை மட்டுமின்றி குடியேற்றம், பயிர்ச்செய்கை என்கின்ற போர்வையில் தமிழர்களின் மரபுவழி தேசியப்பரப்பு சுருக்கப்பட்டு சிதைப்பதன் மூலம் காலப்போக்கில் தேசிய இருப்பை அழிப்பதே பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலாக கருத முடியும்.இவ்வாறனதொரு நிகழ்ச்சி நிரல்கள் தமிழர் தேசியப்பரப்பில் திட்டமிட்டு அரங்கேறி வருவது கண்கூடு.

இதனடிப்படையில் மயிலத்தமடு மாதவனையில் கடந்த 2020ஆம் ஆண்டு அப்போதிருந்த கிழக்கு மாகாண ஆளுரின் ஏற்பாட்டில் சிங்கள குடியேற்றம் ஒன்று சேனைப் பயிர்ச் செய்கை என்ற அடிப்படையில் 600க்கு மேற்பட்ட குடும்பங்கள் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டு பாரிய ஆக்கிரமிப்பு நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர்.

2012ம் ஆண்டு தொடக்கம் 2017ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாகாணசபையினூடாக மேச்சற்தரை விவகாரத்தில் அத்துமீ



றிய மேச்சற்தரை ஆக்கிரமிப்பாளர்களை கட்டுப்படுத்தி அவர்களுக்கெதிராக வழக்குகள் தொடரப்பட்டு ஆக்கிரமிப்பாளர்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் 2019க்கு பின்னராக அதன் நிலவரம் வீரியம் பெற்றதென்றே குறிப்பிட முடியும்.

மட்டக்களப்பு மாவட்டமானது பால் உற்பத்தி மற்றும் விவசாயத்திற்கும் பெயர்போன மாவட்டமாகும். இங்கு 7 க்கு குறையாத கால்நடைப் பண்ணையாளர் சங்கங்களும் 250000 லட்சத்திற்கு குறையாத கால்நடைகளும் இருப்பதாக தெரிவிக்கப்படும் நிலையில் பால் உற்பத்தியின் கேந்திரமாக மயிலத்தமடு பிரதேசமே இருக்கிறதனெ்பதையும் இங்கு சுட்டிக்காட்ட முடியும்.ஆனால் முறையான மேச்சற்தரை இன்மையால் தற்போது பால் உற்பத்தியின் அளவு குறைந்து வருவதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கும் நிலையில் மாடுகளை மேய்கின்ற மேட்டுநில வசதி மயிலத்தமடுவில் காணப்படுவதால் உடனடியாக சட்டவிரோத குடியிருப்பாளர்களை அகற்றி தமது மேச்சற்தரை பகுதியை தந்துதவுமாறு கோரி தற்போது போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்தவரையில் தேசியம் சார்ந்து இரு அரசியல்வாதிகளும் அரசாங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூவரும் உள்ளனர்.தேசியம் சார்ந்து செயற்படும் மக்கள் பிரதிநிதிகள் இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி வரை கொண்டு சென்று வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும் பண்ணையாளர்களுக்கான பாதுகாப்பும் நிரந்தர தீர்வும் இன்னும் எட்டப்படவில்லை என்பது வேதனை.ஆனாலும்



எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்திலும் பால் உற்பத்தியிலும் பொருளாதாரத்தில் பாரியதொரு பாதிப்பினையும் பெரும் சிக்கலையும் ஏற்படுத்தப்போகின்ற இவ் மக்கள் பிரச்சனைக்கு நிரந்த தீர்வொன்றை கட்சிபேதம் கடந்து ஓரணியில் நின்று தீர்க்கமான முடிவொன்றை ஏற்படுத்தாதவிடத்து எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடியையும் சிக்கலையும் ஏற்படுத்தும் என்பதே உண்மை.



தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி: +94 76 567 3339
மின்னஞ்சல்: thesiyamnews@gmail.com
இணையம்: www.thesiyamnews.com



# ரணில்- விக்கி லடாய்
## தமிழ் மக்களுக்கு புதியதொன்றல்ல

**ரணில்** விக்ரமசிங்க உறுதியளித்த பல விடயங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லையென தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஆத்திரப்பட்டிருக்கிறார்.அவர் தன்னுடைய ஆத்திரத்தை ஜனாதிபதிக்கு கடிதமொன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.ஜெர்மன் பத்திரிகையாளருக்கு ஜனாதிபதி அளித்த நேர்காணல் மூலம் வௌிநாடுகளில் பெற்றிருந்த வெற்றிகள் அனைத்தும் களங்கப்படுத்தப்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ள விக்கினேஸ்வரன்,இதன் ஊடாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கடும்போக்கு சிங்களவர்களின் வாக்குகளை உறுதிப்படுத்திய போதிலும் சிங்களவர்கள் அல்லாதவர்களின் வாக்குளை இழக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.மேலும்,தமிழ் மக்களின் வாக்குகள் தேவையில்லாவிடில், தங்களிடம் அதனை கூறுமாறும் தமிழர்கள் பொதுவான தமிழ் வேட்பாளரை நியமிப்பது பற்றி சிந்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன்,ஜனாதிபதியினால் உறுதியளிக்கப்பட்ட பல விடயங்கள் நடைமுறைக்கு வரவில்லை என தெரிவித்துள்ள சி.வி., அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தக் கூடிய ஆலோசனைக் குழு இதுவரை நியமிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதியரசர் விக்னேஸ்வரன் மாத்திரமல்ல,தமிழ் தலைவர்கள் அனைவருமே சிங்கள தலைவர்களை நம்புவதும் பின்னர் ஏமாறுவதும் பின்னர் ஏமாந்துவிட்டோமென கூறி கடிதம் எழுதுவதும் புதிய விடயமல்ல. காலாகாலமாக இவ்வாறான கூத்துக்களை தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.கடந்த 70 வருட தமிழர் தேச அரசியலை உற்றுநோக்கினால் தமிழீழ விடுதலைப்புலிகளை தவிர,ஏனைய அனைத்து தமிழ் தரப்புகளும் சிங்கள பேரினவாதிகளிடம் உறவு கொண்டாடுவதும் பின்னர் நாங்கள் ஏமாந்துவிட்டோம் என்று பல்டியடிப்பதும் பழகிப்போன விடயம்.ஆனால்,இத்தனை ஏமாற்றங்களையும் அழிவுகளையும் மாத்திரம் தமிழ் மக்களுக்கு தந்த சிங்கள பேரினவாதிகளுடன் மீண்டும் மீண்டும் உறவுகளை புதுப்பிப்பதும், அவர்களுடைய ஏமாற்று வார்த்தைகளையும் ஏமாற்று பித்தலாட்டங்களையும் நம்பி அவர்களுக்கு பின்னால் செல்லும் தமிழ் தலைவர்களின் இராஜதந்திரமற்ற அரசியல் போக்கு,மற்றும் அரசியல் வெறுமையை தமிழர்கள் இனியும் பொறுத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது கடினம்.

நீதியரசர் பல தடவைகள் இதேபோன்று சிங்கள பேரினவாதிகளை நம்புவதும் பின்னர் அவர்கள் தொடர்பில் வசைபாடுவதும் என அறிக்கை .வெளியிட்டிருக்கிறார்.முதலமைச்சராக பதவியேற்ற சமயம் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு முன்னால் பலருடைய எதிர்ப்பையும் மீறி பதவியேற்றிருந்த விக்னேஸ்வரன்,பின்னர் மகிந்த அரசாங்கத்துடன் முறுகல் போக்கை கையாண்டிருந்தார்.அதேபோல், ரணில் விக்ரமசிங்க அரசியலில் கோலோச்சிய வேளையிலெல்லாம் அவருடன் நட்பு பாராட்டுவதை வளமையாக்கி கொண்டிருந்ததுடன், ரணிலுக்கு ஆதரவாக பல கருத்துக்களையும் வெளியிட்டு வந்திருக்கிறார்.ரணில் ஒரு ஏமாற்று பேர்வழி என்பதை அரசியல் தெரியாத ஒரு அறிவிலி கூட நன்கறிவார்.அவ்வாறிருக்கையில் ரணிலை நம்பினோம் அவர் ஏமாற்றிவிட்டார் என்று நாடகமாடும் தமிழ் தலைவர்களை பார்த்து பல கேள்விகளை கேட்க தோன்றுகிறது.

முதலில் தமிழ் தலைமைகள் கடந்த கால வரலாறுகளை –படிப்பினைகளை அறியவேண்டும்.அதை தாண்டி தமிழ் தலைமைகள் தாங்கள் எதற்காக–என்ன நோக்கத்துக்காக தமிழர்களை ஆளவேண்டுமென எண்ணி அரசியலுக்கு வந்தார்கள் என்பது பற்றி சிந்திக்கவேண்டும். ஈழத்தமிழர்கள் கடந்துவந்த பாதை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.அதேபோல்,பௌத்த பேரினவாதிகள் தமிழர்களை ஏமாற்றி ஏமாற்றி எத்தனை அநியாயங்களை செய்தார்கள் என்பதை பற்றி சிந்திக்கவேண்டும்.அதை தாண்டி அரசியல் கொள்கையை அடிக்கடி மாற்றிக்கொள்ளாமல் ஒரே கொள்கையில்–ஒரே பாதையில் பயணிப்பதில் அக்கறையுடன் செயற்பட வேண்டும். இந்த விடயங்களில் அவதானமாகவும் நிதானத்துடனும் பயணித்தால் மாத்திரமே பல அவலங்களையும் அழிவுகளையும் சந்தித்த ஒரு இனத்தின் பிரதிநிதியாக இருக்க தகுதியுடையவர்களாக இருக்க முடியும்.முதலில் தமிழ் தலைமைகள் இராஜதந்திர புத்தியை வளர்த்துக்கொள்ளவேண்டும்.ஒவ்வொரு சிங்கள தலைவர்களினதும் இராஜதந்திர நகர்வுகள் பற்றிய படிப்பினைகளை கற்று–புரிந்துகொண்ட அதற்கேற்ப ஈழத்தமிழர் அரசியலை முன்னெடுப்பதே காலத்தின் தேவையாகும். சிங்கள பேரினவாதிகள் சிரிக்கும் வகையில் தமிழ் தலைமைகளினது செயற்பாடுகள் இருப்பது வீர மறத்தமிழனுக்கு பொருத்தமானதாக இருக்காது.இனியும் சிங்கள பேரினவாதிகளை நம்பினோம் ஏமாற்றிவிட்டார்கள் என்று கூறுவதை விடுத்து தமிழ் தலைமைகளின் இராஜதந்திரத்தால் சிங்கள பேரினவாதிகள் செய்வதறியாது தடுமாற்றம் என்ற அறிக்கையை வெளியிடுமளவுக்கு தமிழ் தலைமைகள் அரசியல் பாடத்தை கற்றுத்தேற வேண்டுமென கூறிவைக்கின்றோம்.

# ‘ஈழத்தில் இந்தியப் படையின் ரணகளம்’



## கொக்குவில் பிரம்படி கொடூரப் படுகொலையின் மாறாத நினைவலைகள்!

இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட ஈழத்தமிழ்மக்கள் மீதான படுகொலைகள் வரிசையில் முதல் கோரச் சம்பவமாகப் பதிவாகிய கொக்குவில் பிரம்படி கொடூரப் படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை கொக்குவில் ஆடியபாதம் வீதியில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கான நினைவுத் தூபியடியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு யூலை மாதம்-29 ஆம் திகதி இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கில் அமைதிப்படை எனும் பெயரில் இந்திய இராணுவம் வந்திறங்கியது. தமிழ்மக்கள் இந்திய இராணுவத்தினரைத் தமது மீட்பர்களாக கருதிய போதிலும் அமைதிப் படையாக வந்திறங்கிய இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாறியது. தமிழர் தாயகத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழ்மக்களைக் கொன்று குவித்தது.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்-10 ஆம் திகதி இரவு-07 மணிக்குப் பின்னர் கொக்குவில் பிரம்படி மற்றும் அயற்பகுதிகளுக்கு மேலாக விமானங்கள் மேலே சுற்றிய படியே இருந்துள்ளதுடன் சூட்டுச் சத்தங்களும் கேட்டபடியே இருந்துள்ளன. இதன் எதிரொலியாகச் சிலர் கிராமத்திலிருந்து வெளியேறி வேறிடங்களுக்குச் சென்றார்கள். எனினும், பலர் ‘இந்தியன் ஆமி தானே எங்களை ஒன்றும் செய்யாது’என்ற நம்பிக்கையுடன் தத்தமது வீடுகளிலிருந்தார்கள்.

இந்நிலையில் மறுநாள் ஒக்டோபர் மாதம்-11 ஆம் திகதி காலை கொக்குவில் பிரம்படிப் பகுதி இந்திய இராணுவத்தினரால் ஒப்பரேசன் பவன் நடவடிக்கை மூலம் சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது பிரம்படி வீதியில் ஒரு வீட்டில் பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகுந்திருந்த நிறைமாதக் கர்ப்பிணியொருவரும், சிறார்கள், பெண்கள் உள்ளிட்ட பலரும் உணவு, நீர் எதுவுமின்றி எங்கும் செல்ல முடியாதவாறு மிகவும் அச்சமானதொரு சூழ்நிலையில் நீண்ட நேரமாக இந்திய இராணுவத்தினரால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். எனினும், அவர்கள் கண் முன்னே எதிர்வீட்டிலும், எதுவுமே அறியாத நிலையில் வீதியால் சென்ற பலரும் ரொக்கெட் லோஞ்சர் மற்றும் துப்பாக்கிகளால் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மறுநாள்-12 ஆம் திகதி செயின் விளக்குகளில் வந்த இந்திய இராணுவத்தினர் மேற்படி வீட்டில் பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகுந்திருந்தவர்களை வெளியே அழைத்துச் சுட ஆயத்தமான நிலையில் அங்கிருந்த சிலர் ஒருவாறு தப்பித்துக் கொண்டனர்.

குறித்த சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள் எனப் பாகுபாடின்றிப் பொதுமக்கள் மீது மிகவும் மோசமான, கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு மற்றும் எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டதுடன் உயிருடன் வீதியிலும், ரயில் தண்டவாளத்திலும் குப்புறப்படுக்க வைக்கப்பட்டுக் கவச வாகனங்களினால் நசித்தும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பரிதாபகரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

சம்பவத்தில் பிரம்படிப் பகுதியில் வாடகைக்குத் தங்கியிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற முஸ்லிம் மாணவர் ஒருவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவந்த நயினாதீவைச் சேர்ந்த மேலும் இரண்டு மாணவர்களும், பாடசாலைகளில் கற்று வந்த பல மாணவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களில் இரண்டு ஆண் குழந்தைகள் மற்றும் பெண்களும் உள்ளடங்கியுள்ளனர். சம்பவத்தில் பெறுமதியான பல உயிரிழப்புக்களுடன், பல லட்சக்கணக்கான சொத்தழிவுகளும் ஏற்பட்டன. உயிருடனும், சுட்டுச் சடலங்களாகவும் கவச வாகனங்களால் நசிக்கப்பட்ட நிலையில் உடல்கள் பலவும் நசிந்து துகள்களாகின. சம்பவத்தின் பின்னர் கால்களே வைக்க முடியாதளவு பிரம்படி வீதி இரத்தமும், சதையுமாகமிருந்ததாக பிரம்படிப் படுகொலைச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் வலிகள் மாறாத கனத்த மனதுடன் கருத்துப் பகிர்ந்தனர்.

**கொக்குவில் பிரம்படிப் படுகொலையின் கோரப் பிடியிலிருந்து தப்பிய நேரடிச் சாட்சியான அப்பகுதியைச் சேர்ந்த எஸ்.ஜெகதீஸ்வரி என்ற வயோதிபப் பெண் குறித்த சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,**

பிரம்படிப் படுகொலைச் சம்பவம் நடக்கும் போது எனக்கு 32 வயது. அப்போதைய சூழலைப் பார்த்தால் எங்கள் குடும்பம் தப்பியதை ஒருவரும் நம்ப மாட்டார்கள். சைவம் குடும்பமென ஊரவர்களால் அழைக்கப்பட்ட எங்கள் குடும்பத்தில் ஒருவரும் மிஞ்சவில்லை என்றே அப்போது வெளியே கதை பரவியிருந்தது.

பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த நாம் ஒருவாறு அதிலிருந்து தப்பித்துக் கொண்டோம். சூட்டுச் சத்தங்கள் ஓய்ந்தபின் முன் வீட்டைத் திறந்து பார்த்த போது அங்கே 12 பேருக்கு மேல் சடலங்களாக கிடந்தார்கள். என்னுடைய தங்கச்சிமார் இருவரும் அங்கே சடலங்களாக கிடந்தனர். அதனைப் பார்த்துவிட்டுக் கத்தியபடி வெளியே வந்தேன். இன்னொரு வீட்டில் நாயைப் பிடிக்க வந்தவரும் சுடப்பட்டார். அதைப் பார்த்துக் கத்திய அவரது மனைவியும் பின் ஒன்பது மாதக் குழந்தையையும் நோக்கி கிரைனேட் எறிந்து கொன்றார்கள் என்றார்.

**பிரம்படிப் படுகொலையின் மற்றொரு நேரடிச் சாட்சியமான மூத்த எழுத்தாளரும், தமிழ்த்தேசியப் பற்றாளருமான மு.ஈழத்தமிழ்மணி கருத்துத் தெரிவிக்கையில்,**

அமைதிப்படை எனும் போர்வையில் இலங்கை வந்த இந்திய இராணுவத்தினர் கொக்குவில் பிரம்படிப் பகுதியில் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர்-11, 12 ஆம் திகதிகளில் மூர்க்கத்தனமாக 50 இற்கும் மேற்பட்ட மக்களைப் படுகொலை செய்தது. இதன்போது ஒருவயதுக்கு உட்பட்ட ஒரு குழந்தையைக் கூட இந்திய இராணுவம் எறிகணை வீசிப் படுகொலை செய்த சம்பவம் மறக்க முடியாதது.

எனது மனைவி, மனைவியின் உறவினர்கள் என 25 இற்கும் மேற்பட்டோர் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். ஏனையவர்கள் தப்பிக் கொக்குவில் பிரம்படிப் பகுதியால் பாதுகாப்புத் தேடி வந்த நிலையில் அவர்களும் படுகொலை செய்யப்பட்டனர். மிகவும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வீடுகளுக்குள் முடங்கியிருந்த மக்களை வெளியேற முடியாதவாறும், இயற்கைக் கடன்கள் கூடக் கழிக்க முடியாதவாறும் இந்திய இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. அதனைத் தொடர்ந்து தங்கள் உறவுகளைக்



காணவில்லையே! என்று தேடி வந்த மக்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடாத்தியும், எறிகணைகள் வீசியும் இந்திய இராணுவம் தாக்குதல் நடாத்தியது.

இந்தச் சம்பவம் இடம்பெற்று மூன்று நாட்களின் பின்னர் தான் பொதுமக்களின் அழுகிய சடலங்களை உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மீட்டுத் தகனம் செய்தனர். இதற்கும் கூட இந்திய இராணுவம் தடையை ஏற்படுத்தியது. இப்படியான பெரிய பயங்கரமான படுகொலைச் சம்பவம் இடம்பெற்று 36 ஆண்டுகளாகின்றன. எனினும், இன்றுவரை இந்தச் சம்பவத்தை எந்தவொரு தமிழ் அரசியல் தலைமைகளும் கண்டித்ததுமில்லை. ஜெனீவா மாநாட்டிலேயோ அல்லது ஏனைய இடங்களிலேயோ குரல் கொடுத்ததுமில்லை எனவும் அவர் கடும் விசனம் வெளியிட்டார்.

தொகுப்பு: தமிழின் தோழன்

**ஏழு கட்சிகளின் ஒரு நாள் கடையடைப்பு அரசாங்கத்தைப் பணிய வைக்குமா? அல்லது தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள் என்ற ஒரு விடயத்தை உலகத்துக்கும் அரசாங்கத்துக்கும் உணர்த்துவது மட்டும்தான் கடையடைப்பின் நோக்கமா? அல்லது தமிழ்க் கட்சித் தலைவர்கள் நோகாமல் போராடுவதற்கு வசதியான ஒரு போராட்ட முறைதான் கடையடைப்பா?**



# நோகாமல் போராடும் கட்சிகளின் கடையடைப்பு?


நிலாந்தன்

காந்தி சொல்வார்.அகிம்சை என்பது சாகத் துணிந்தவரின் ஆயுதம்,அது சாகப் பயந்தவரின் ஆயுதம் அல்லவென்று. அகிம்சையில் மட்டுமல்ல வன்முறை போராட்டத்திலும் அதுதான் அடிப்படை விதி. அர்ப்பணிப்புக்குத் தயாராக இருப்பவர்கள்தான் தலைமை தாங்கலாம். தியாகத்துக்கு தயாராக இருக்கும் தலைமையின் கீழ் மக்கள் துணிந்து அணி திரள்வார்கள். முன்னுதாரணம் மிக்க தலைவர்களின் பின்தான் மக்கள் அணி திரண்டிருக்கிறார்கள்.

ஆனால் தமிழரசியல் அரங்கில் முல்லைத்தீவு நீதிபதிக்கு ஆதரவாக நடந்து கொண்டிருக்கும் போராட்டங்களைத் தொகுத்துப் பார்த்தால்,ரிஸ்க் எடுப்பதற்கு தயாரில்லாத தலைவர்கள் பொதுமக்களை ரிஸ்க் எடுக்குமாறு தூண்டுகிறார்களா? என்று கேட்கத் தோண்றுகிறது.

ஏழு கட்சிகள் இணைந்து கடந்த வாரம் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தின. அது பெரிய வெற்றியைப் பெறவில்லை. இப்பொழுது ஒரு கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.முல்லைத்தீவு நீதிபதி;நிலப் பறிப்பு;சிங்களபௌத்த மயமாக்கல் மேய்ச்சல் தரை போன்ற எல்லா விவகாரங்களுக்குமாக வடக்குக் கிழக்கு முழுவத்துக்குமாக கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கொங்கிரசும் அதற்கு ஆதரவு தருவதாக வாக்குறுதி அளித்ததாக ஒரு தகவல். முதலில் இந்த வாரம் கடையடைப்பு என்று கூறப்பட்டது.ஆனால் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை காரணமாக திகதியை ஒத்திவைக்குமாறு கேட்கப்பட்டது.அதனால் வரும் இருபதாம் திகதி, வெள்ளிக்கிழமை பூரண கடையடைப்பு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.ஏன் வெள்ளிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவது காரணம்,குறுகிய காலத்துக்குள் ஒழுங்கு செய்யக்கூடிய ஒரு போராட்டம் அதுதான் என்பது.இரண்டாவது காரணம்,பெரிய போராட்டங்களுக்குத் தேவையான நிதியை உடனடியாகத் திரட்டுவதில் உள்ள சவால்கள். மூன்றாவது காரணம், வடக்குக் கிழக்கு தழுவிய ஒரு போராட்டம் குறிப்பாக முஸ்லிம்களையும் உள்ளடக்குவது என்று பார்த்தல் கடையடைப்பே வசதியானது. நாலாவது காரணம்,அது வார இறுதி என்பதால் அன்றைக்கு வியாபாரம் பெரியளவு நடக்காது. எனவே வணிகர்கள் கடைகளை மூடச் சம்மதிப்பார்கள். ஐந்தாவது காரணம்,அன்றைக்கு ஒன்பதாம் ஆண்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு தனியார் வகுப்புகள் நடக்காது. எனவே அந்தக் கடையடைப்பால் பிள்ளைகளின் படிப்பு அதிகம் பாதிக்கப்படாது.ஆறாவது காரணம், வெள்ளிக்கிழமை என்பதனால் முஸ்லிம்களும் அந்நாளில் கடைகளை மூடத் தயார் என்பது.இக்காரணங்களினால் அந்த வெள்ளிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அதைவிட முக்கியமாக மூன்று காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், தமிழ் அரசியல்வாதிகளிடம் 2009க்குப் பின்னரான அறவழிப் போராட்டம் தொடர்பாக பொருத்தமான தரிசனங்கள் இல்லை என்பது. அவர்கள் போராடுவோம் போராடுவோம் என்று கூறுகிறார்கள்,ஆனால் எப்படிப் போராடுவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.புதிய போராட்ட வடிவங்களைக் கண்டுபிடிக்க அவர்களால் முடியவில்லை.அதனால்தான் பழைய, வழக்கொழிந்த, அல்லது சிறு திரள்,கவனஈர்ப்புப் போராட்டங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.பெருந்திரள் மக்கள் போராட்டங்களை ஒழுங்குபடுத்த அவர்களால் முடியவில்லை.

இரண்டாவது காரணம்,அவர்களிடம் மக்களைத் திரட்டத் தேவையான அடிமட்டக் கட்டமைப்புக்கள் இல்லை.ஏற்கனவே பலமாக உள்ள கட்டமைப்புக்களில்தான் தங்கியிருக்கிறார்கள்.ஏற்கனவே உள்ள சிவில் கட்டமைப்புக்கள் சம்மதித்தால், ஒருநாள் வாழ்க்கையை ஒப்பீட்டளவில் முடக்கலாம். உதாரணமாக வணிகர் கழகங்கள்,தனியார் வாகன உரிமையாளர்கள்,சந்தை நிர்வாகங்கள்போன்றன ஒத்துழைத்தால் கடைகளை,சந்தைகளை மூடலாம்;பொதுப் போக்குவரத்தை முடக்கலாம்.

மூன்றாவது காரணம், அவர்கள் ரிஸ்க் எடுக்கத் தயாரில்லை. இதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால்,அவர்கள் தங்களுடைய மக்களுக்கு;தங்களுடைய அரசியல் இலக்குகளுக்கு விசுவாசமாக இல்லை.அதற்காக அர்ப்பணிப்போடு போராடத் தயாரில்லை. சிவப்பு மஞ்சள் கொடிகளைக் கட்டி, தாயகம்;தேசியம்;சுயநிர்ணயம். என்று கோஷம் வைத்தால் தமிழ் மக்கள் தங்களின் பின் வருவார்கள் என்று கற்பனை செய்கிறார்கள். அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட பெயர்களை முன்னிறுத்தி அல்லது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சின்னங்களை முன்னிறுத்தி வாக்குகளைத் திரட்ட ஆசைப்படுகிறார்கள். ஆனால் ஒரு புதிய சின்னத்தை ஒரு புதிய கொடியை அறிமுகப்படுத்தி அதற்காக அர்ப்பணித்து தம்மை உருக்கிப் போராடி அந்தச் சின்னத்தை,அந்தப் புதிய பெயரை மக்களுடைய மனங்களில் ஆழமாகப் பதிய வைக்க அவர்களால் முடியவில்லை. இந்த இயலாமைகள்தான் அரசியல்வாதிகள் தங்களுக்கு நோகாத போராட்டங்களை தேர்ந்தெடுக்க காரணம்.

தாங்கள் ரிஸ்க் எடுத்து;தாங்கள் முன்நின்று போராடத் தயாரில்லாத அரசியல் தலைவர்கள் மக்களுக்கும் நோகாமல் தங்களுக்கும் நோகாமல் எப்படிப் போராடுவது என்று சிந்தித்து கண்டுபிடித்த ஒரு போராட்டந்தான் கடையடைப்பா? கடந்த வாரம் அவர்கள் ஒழுங்குபடுத்திய மனிதச் சங்கிலிப் போராட்டம் போராட்டம் ஏன் வெற்றி பெறவில்லை என்பதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளாத கட்சிகள் மீண்டும் ஒரு தடவை தங்களுக்கு நோகாத ஒரு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றனவா? ஏற்கனவே, இந்த ஆண்டு கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழிக்கு நீதி கேட்டு ஒரு கடையடைப்பு நடத்தப்பட்டது. இப்பொழுது மேலுமொரு கடையடைப்பு.

எந்த ஒரு போராட்டமும்,அது ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி,அகிம்சைப் போராட்டமாக இருந்தாலும் சரி,அது பிரதானமாக இரண்டு விளைவுகளை ஏற்படுத்த வேண்டும்.

முதலாவது விளைவு, அகவயமானது.அது மக்களை போராட்டத்தை நோக்கித் திரட்ட வேண்டும். குறிப்பிட்ட அமைப்பின் கீழ் அல்லது கட்சியின் கீழ் மக்கள் ஒரு திரண்ட சக்தியாக, ஆக்க சக்தியாக மாற்றப்பட வேண்டும். அந்த மக்கள் திரட்சிதான் எதிரியைப் பணிய வைக்கும்; வெளி உலகத்தைப் போராட்டத்தை நோக்கி ஈர்க்கும். எனவே எந்த ஒரு போராட்டமும் மக்களை ஒரு மையத்தில் திரட்டி மகத்தான ஆக்க சக்தியாக மாற்றக் கூடியதாக இருக்க வேண்டும்.

இரண்டாவது விளைவு புறவயமானது. அப்போராட்டமானது எதிர்த்தரப்புக்கு வலியை ஏற்படுத்த வேண்டும். சேதத்தை; தாக்கத்தை; இழப்பை ஏற்படுத்த வேண்டும்.எதிர்த் தரப்பின் பொருளாதாரத்தை அல்லது நிர்வாகத்தை முடக்க வேண்டும்.எந்த ஒரு போராட்டமும் எதிர்த் தரப்புக்கு தாக்கமான சேதத்தை ஏற்படுத்தவில்லையென்றால் அங்கே அரசியல் வலுச்சமநிலை மாறாது. அரசியல் வலுச்சமநிலையை மாற்றக்கூடிய சக்தி போராட்டத்திற்கு இருக்க வேண்டும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் கடையடைப்பு என்ற போராட்ட வடிவத்தைப் பார்ப்போம்.

இக்கட்டுரை கடையடைப்பை நிராகரிக்கவில்லை. கடையடைப்பில் ஒரு அடிப்படை நன்மை உண்டு. என்னவெனில்,மக்கள் தாமாக முன்வந்து கடைகளை மூடும்பொழுது அங்கே ஒரு கூட்டுணர்வு ஏற்படும்.ஒரு நாள் உழைப்பை இழப்பதற்கு தயாராகும் மக்கள் தங்களால் இயன்ற தியாகத்தை அன்றைக்குச் செய்கிறார்கள்.அதனால் வரும் இழப்பை



ஏற்றுக் கொள்ளச் சித்தமாய் இருக்கிறார்கள். எனவே போராட்ட நெருப்பை ஒரு சிறு அளவுக்கேனும் அணையாமல் வைத்திருக்க அந்த நாள் உதவும்.மக்களை குறைந்தபட்சம் ஒரு தேசமாகத் திரட்ட அது உதவும்.அதாவது கடையடைப்பால்,அகவயமான நன்மையுண்டு.

இந்த ஒரு நன்மைதான் கடையடைப்பில் உண்டு. மற்றும்படி ஒருநாள் கடையடைப்பு தமிழ் வணிகர்களுக்கும் அன்றாடம் உழைப்பவர்களுக்கும் ஏற்படுத்தக் கூடிய இழப்பை விடவும் அதிகரித்த இழப்பை அரசாங்கத்திற்கு ஏற்படுத்துமா? அல்லது அது உலகத்தை திரும்பிப் பார்க்க வைக்குமா?

கடந்த ஆண்டு டெல்லியில் விவசாயிகள் தொடர்ச்சியாகப் போராடினார்கள்.ஆசிரியர்கள் அதிபர்கள் தொடர்ச்சியாகப் போராடினார்கள். கோட்டா கோகம போலவே விவசாயிகளின் போராட்டமும் உலகின் கவனத்தை ஈர்த்தது.முடிவில் இந்திய அரசாங்கம் விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பணிந்தது.

ஆனால் ஏழு கட்சிகளின் ஒரு நாள் கடையடைப்பு அரசாங்கத்தைப் பணிய வைக்குமா? அல்லது தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள் என்ற ஒரு விடயத்தை உலகத்துக்கும் அரசாங்கத்துக்கும் உணர்த்துவது மட்டும்தான் கடையடைப்பின் நோக்கமா? அல்லது தமிழ்க் கட்சித் தலைவர்கள் நோகாமல் போராடுவதற்கு வசதியான ஒரு போராட்ட முறைதான் கடையடைப்பா?



# மாண்புமிகு மலையக நடைப்பயணம்



## மலையக கல்விக்கு கூறுவது என்ன?

மாண்புமிகு மலையகத்தின் எழுச்சி பயணம் அண்மை காலங்களாக இலங்கையின் பேசுபொருளாக இருக்கின்ற ஒரு விடயமே, இது வேர்களை மீட்டு உரிமை வென்றிட மாண்புமிகு மலையக மக்களின் தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரையான எழுச்சி நடைபயணமாகும்.

இது குறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தமது டுவிட்டர் பக்கத்திலேயே இந்த நடைப் பயணம் பற்றி பதிவிட்டிருந்தார். ஆரம்ப காலத்தில் பிரத்தானியர்கள் தன்னுடைய காலனித்துவத்திற்கு கீழ் பல நாடுகளை ஆக்கிரமித்த வேளை கோப்பி, கரும்பு, தேயிலை போன்ற பெருந்தோட்டப்பயிர்களை பயிரிட்டதுடன், அதற்கான தொழிலாளர்கள் தேவைப்பட்ட தருணம் பிரித்தானியா, தன்னுடைய ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்த நாடுகளில் இருந்து தொழிலாளர்களை அழைத்திருந்தது.. அவ்வாறு இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மக்களே இன்றைய இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களாவர்.

அவ்வாறு வந்தடைந்த மக்கள் பல்லாயிரக் கணக்கானோர் மன்னாரில் தரையிறங்கி மாத்தளை வரை நடைப்பயணமாகவே சென்றனர். அவ்வேளையில் 40 சதவீதமான மக்கள் காட்டு விலங்கு , பாரிய நோய் தாக்குதல் இன்னும் சில அச்சுறுத்தல்களால் மரணம் அடைய , மீதமானவர்களே மாத்தளை வரை வந்தடைந்தனர். அப்படி அவர்கள் வந்த தருணம் தங்களின் மத அடையாளமாக உருவாக்கிய இடமே இன்றைய மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயமாகும். இவ்வாறு அவர்கள் வந்தடைந்து 200 வருடங்கள் பூர்த்தி அடைந்த நிலையில் இன்னமும் அம்மக்களுடைய சமத்துவம் நிலைநாட்டப்படாமை தொடர்பிலும் உரிமை இன்றிய நிலையை வெளிக்காட்டவும் எம் மூதாதையினரின் கடின பயணத்தை நினைவு கூறவும் , இலங்கையின் தனித்துவமான அடையாளங்களைக் கொண்ட மக்களாக தம்மை அங்கீகரிக்க கூறவும், ஏனைய சமூகங்களுக்கு இணையாக எம் மக்களை வழிநடத்தி குரலெழுப்பும் வண்ணம் இந்த 'மலையக எழுச்சி பயணம்' என்றத் தொனிப் பொருளின்படி இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் , சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மலையகம் சமூக ஆர்வலர்களால் இணைந்த நடைப்பயணம் மன்னர் தொடக்கம் மாத்தளை வரையாக கடந்த ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 12 வரையான காலப்பகுதியில் இடம்பெற்றது.

இந்த நடை பயணத்தின் முக்கிய இலக்கானது ஏனைய இன, மதம், மொழி சார்ந்த சகோதர பிரஜைகள் மத்தியில் மலையகத்தமிழ் சமுதாயத்தின் வரலாறு, போராட்டங்கள், சாதனைகள், பங்களிப்பு, தற்போதைய அரசியல், சமூக, பொருளாதார அந்தஸ்து , அபிலாசைகள் போன்றனவற்றை அடிப்படை மட்டத்திலான புரிதலை ஏற்படுத்துவதே ஆகும் .

தற்கால மலையக சூழ்நிலையிலே பெருந்தோட்ட குடியிருப்பாளர்கள் 50,0000ற்கு அதிகமாக இருக்கின்ற நிலைமையில் சொந்தக்காணி உரிமையற்ற நிலை, சமூக , பொருளாதார, அரசியல் இஸ்திரதன்மையற்ற நிலை, ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது மனித அபிவிருத்தி சுட்டிகள் குறைந்த அளவீடுகளும் ஓரங்கட்டப்பட்ட நிலையும் இருக்கின்றது. குறிப்பாக தோட்ட முதலாளிமார்களையே சார்ந்திருக்கும் தொழிலாளர்களின் நிலைகூட இன்னும் மாறாத தன்மை உள்ளது . அண்மையில் ரம்பொடை ,ஆர்.பி பிரிவு பிரதேசத்தில் இடம்பெற்ற தோட்ட துரைமார்களுடைய ஆதிக்கம் அதற்கு தக்க எடுத்துக்காட்டாகும்.

இன்றைய காலப்பகுதியில் மலையகத்தில் அழிக்கப்பட வேண்டிய விடயங்களில் ஒன்றே லயன் வீடுகளாகும். மேலும் சீரான சுகாதார வசதியின்மை, போசாக்கற்ற உணவு முறை, அத்தியாவசிய தேவை நிவர்த்தி குறைவு போன்ற முக்கிய குறிக்காட்டிகளளின் பின்னடைவை காணலாம்.குறிப்பாக கல்வி முறைகளில் கூட நகர்ப்புற பாடசாலைகளில் இருந்து தோட்டப்புற பாடசாலைகளின் அத்தியாவசிய வசதிகள் குறைவாகவே உள்ளது. அத்தோடு கல்வி அடைவு வீதங்கள் விஞ்ஞான, கணித பாட ஆசிரியர்கள் தொகுதி , சுகாதார சேவைக்காக செயற்படும் நபர்கள் குறைவாக இருப்பதோடு நிர்வாக சேவை, நலன்புரி நிகழ்ச்சி திட்டங்களுமே சமனற்ற விகிதத்திலேயே உள்ளது.

இவ்வாறான காரணங்களோடு முகவரி இல்லா சமூகம் என்ற நாமம் மட்டுமே இறுதியாகிறது. ஏனைய சமூகங்களை விட





வறுமை விகிதம் மலையகத்தில் அதிகமாக உள்ளது. அனர்த்த முகாமைத்துவ தணிப்பு நடவடிக்கைகள் கூட குறைவாகவே நடைபெறுகின்றது. இதனுடைய நீட்சியே இந்த நடைப்பயணத்தின் காரணமாக உள்ளது. இது காலத்தின் தேவையாகவும் உள்ளது . மக்களின் குரலின் அதிகாரத்தை பிரதிபலிப்பதாய் இந்த நடைபயணம் இருக்கின்றது. இதற்கு நாட்டில் பல பாகங்களில் இருந்து மக்கள் அணி திரண்டு வந்து குவிந்தனர். இன்னமும் எமது நாட்டில் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருக்கும் பெருந்தோட்ட குடிகளின் நிலை வெளிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். ஆரம்ப காலத்தில் இலங்கை அரசியலமைம்பின் 29(2) ஆம் உறுப்புரையின் படி சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி, சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து பெருந்தோட்ட மக்களின் பிரஜா உரிமை மறுக்கப்பட்டது. மேலும் 1964 சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம் , 1979 சிறிமா- இந்திரா ஒப்பந்தம் போன்றன ஒப்பந்தங்களினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உறவுகளை பிரிந்து இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தற்போது அங்குள்ள தமிழர்களை இலங்கைத் தமிழர்கள் என்றும் , இலங்கையில் இருக்கும் தமிழர்களை இந்திய தமிழர்கள் என்றும் அழைக்கின்றனர். உண்மையில் அவர்களின் அடையாளம் கேள்விக்குறியாகிறது. ஐந்து தசாப்தங்களை தாண்டி நிலம் , சமத்துவம், உரிமைக்காக போராடியே வாழ்க்கை உருண்டோடுகின்ற போதிலும் 1946 ஜூன் 21 ஆம் திகதி அன்று உருளவல்லி நிலப் போராட்டம் முதல் இன்றைய நடைப்பயணம் வரை போராட்டங்களுக்கு முடிவிலியாக இருக்கின்ற வேளை இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவே இந்த நடைப்பயணம் இருப்பதோடு இம் மலையக மக்களை ' மாண்புமிகு மலையக மக்கள் என தம்மை அழைக்க கோரியுள்ளனர்.

எமது வரலாறு, போராட்டம் மற்றும் பங்களிப்பினை ஏற்று அவற்றை அங்கீகரித்தல். ஏனைய பிரதான சமூகங்களுக்கு இணையாக ஒரு தனித்துவமான அடையாளத்தை கொண்ட , சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் ஒரு பகுதி மக்களாக அங்கீகரித்தல்.

தேசிய சராசரிகளுடன் சமநிலையை எட்டுவதற்காக விசேடமாக இச்சமூகத்தை இலக்கு வைத்து விசேட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் மீதான உறுதியான நடவடிக்கை. வாழ்வியலுக்கான ஓர் ஊதியம், கண்ணியமான வேலை ,தொழிலாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பு மற்றும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சமமான ஊதியம். வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்கான பாதுகாப்பான உரிமைக்காலத்துடனான காணியுரிமை. தமிழ் மொழிக்கு சமனாக பயன்பாடு மற்றும் சம அந்தஸ்து.

அரசாங்க சேவைகளை சமமாக அணுகுவதற்கான வாய்ப்பு. பெருந்தோட்டங்களிலுள்ள மனிதக் குடியேற்றங்களை புதிய கிராமங்களாக நிர்ணயம் செய்தல்.

வீட்டுப் பணியாளர்களின் முழுமையான பாதுகாப்பு.

மலையகக் கலாச்சாரத்தை பேணுதல் மற்றும் மேம்படுத்தல்.

அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் ஆளுகையில் ஓர் அர்த்தமுள்ள வகிபங்கை வழங்கும் ஒப்புரவான மற்றும் உள்ளடங்களான தேர்தல் முறையை மற்றும் அதிகார பகிர்வு . இவ்வாறான 11 கோரிக்கைகள் மூலமாக இந்த மாண்புமிகு மலையகத்தின் எழுச்சி நடை பயணமானது நடைபெற்றது. இந்த கோரிக்கைகள் அரசாங்கத்தின் செவிகளை எட்டும் போது புதியதோர் மலையக சமூகத்தின் படைப்பு இடம்பெற தயாராகும் என்பதில் ஐயமில்லை.



செல்வகுமார்
ரினோஷன்
ஊடக கற்கைகள் துறை
கலைப் பீடம்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

# மொசாட்டை திணரடித்த ஈடுடக தாக்குதல்!

## ஹமாஸின் அல்- அக்ஸா ஏவுகணை புயல்!!





## மாறுகிறதா மத்திய கிழக்கின் போர்வலு ?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

**ஹமாஸ் கடந்த சனி இஸ்ரேல் மீது இருபதே நிமிடங்களில் 5,000 ராக்கெட்டுகளை வீசி அந்நாட்டை, மட்டுமின்றி உலகையே அதிரச் செய்துள்ளது**

மொசாட் இஸ்ரேலின் உளவுத்துறை மட்டுமன்றி, உலகின் சிறந்த உளவு அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படும் மொசாட் ஆகியவற்றையே ஏமாற்றி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி உள்ளது பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பு.

### மொசாட்டை திணரடித்த தாக்குதல் :

பாலஸ்தீனப் பகுதிகளில் இயங்கி வரும் பல்வேறு ஆயுதக் போராட்டக் குழுக்களில் மிகப் பெரிய அமைப்பே ஹமாஸ். கடந்த சனி இஸ்ரேல் மீது இருபதே நிமிடங்களில் 5,000 ராக்கெட்டுகளை வீசி அந்நாட்டை, மட்டுமின்றி உலகையே அதிரச் செய்துள்ளது ஹமாஸ் அமைப்பு.

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உள்பட அந்நாட்டின் முக்கிய நகரங்களில் பல இடங்கள் பற்றி எரிந்தன. ஹமாஸ் தாக்குதலுடன், ஆயுதக் குழுவினரும் இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தினர்.

இஸ்ரேலும் பதிலடி தாக்குதலை தொடங்கியுள்ளதால், 2021-ம் ஆண்டுக்குப் பிறகு அங்கே மீண்டும் பெரிய அளவிலான போர் தொடங்கியுள்ளது. அமெரிக்க ஆதரவுடன் அதிநவீன ராணுவத்தை கட்டமைத்துள்ள இஸ்ரேலை அவ்வப்போது நிலைகுலையச் செய்யும் ஹமாஸ் அமைப்பினரின் இத்தாக்குதல் எவராலும் கணிப்பிட முடியாமல் போனது.

### இஸ்ரேல் தனி நாடு உருவாக்கம்:

பத்து மில்லியன் மக்கள் தொகை மட்டுமே கொண்ட ஒரு சிறிய நாடு. இஸ்ரேல் மீது பல்வேறுபட்ட எதிர்மறை கருத்துகள் இருந்த போதிலும் தன்னம்பிக்கைக்கு இந்த நாட்டை விட உலகில் வேறு எந்த நாட்டையும் உதாரணமாக கூற முடியாது.

1948 மே 14இல் இஸ்ரேல் தனி நாடாக அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் நாட்டின் அதிகாரபூர்வ மொழிகள் ஹீப்ரூ மற்றும் அராபி. இஸ்ரேல் நாட்டின் மக்கள் தொகையில் 74% பேர் யூதர்கள் மற்ற 20.8% பேர் அரேபியர்கள் ஆவர். உலகில் பல படித்த அதிக மேதாவிகள் இங்கு தான் உள்ளனர். உண்மையில் உலகத்தை மறைமுகமாக ஆளும் தந்திரம் மிக்கவர்கள் இஸ்ரேல் நாட்டினர் என்றே கூறலாம்.

### மொசாட் உருவான கதை:

பிரிட்டிஷ் அரசு பாலஸ்தீனத்தில் ஆட்சி புரிந்துக் கொண்டிருந்த காலத்தில் அங்கே



அதிகமாக வாழ்ந்தவர்கள் அரேபியர்கள். யூதர்களின் எண்ணிக்கை மிக குறைவே. அப்போது இருந்து அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் மறைமுகமாக போர் நடந்துக் கொண்டு தான் இருந்தது.

அரேபியர்கள் தங்கள் நாட்டில் யூதர்கள் வாழ்வதை விரும்பவில்லை. ஆனால் அன்றைய காலக்கட்டத்தில் ஆட்சி புரிந்த பிரிட்டிஷ் அரசு யூதர்கள் எண்ணிக்கை அதிகரிக்க உதவியது. உலகம் முழுவதும் வாழ்ந்த யூதர்கள் ஒரு காலக்கட்டத்தில் இஸ்ரேலை நோக்கி வர துவங்கினர்.

ஜெர்மனி சர்வாதிகாரி ஹிட்லர் ஆட்சியில் நாஜி படையின் மூலம் யூதர்கள் லட்சக்கணக்கில் கொல்லப்பட்டனர். அப்போது ஹிட்லரிடமிருந்து யூதர்களை காப்பாற்ற இஸ்ரேல் மக்கள் எந்த அளவு வேண்டுமானாலும் முயற்சி செய்ய தயாராக இருந்தனர். அவர்கள் மிகப்பெரிய செலவில் கப்பல்களை வாங்கினர்.

ஜெர்மனியில் இருந்து இஸ்ரேல் வருவது அந்த சமயத்தில் மிக இக்கட்டான ஒரு சூழலே. ஒரு புறம் நாஜி படைகள் யூதர்களை தேடி கொண்டிருக்க மறுபுறம் பிரிட்டிஷ் அரசும் யூதர்கள் பெரும் அளவில் வந்து குடியேறுவதை விரும்பவில்லை.

இதற்கு பின் உலகில் வாழ்ந்த யூத மக்களை ஒன்றிணைந்து கொண்டு வர வைக்க அமைக்கப்பட்ட ஒரு ரகசிய குழு தான் இந்த உளவு அமைப்பு. இந்த உளவு அமைப்பின் பெயர் மொசாட் லிஅலியா பெட்.

காலமாற்றத்தில் இந்த அமைப்பு மொசாட்டாக வளர்ச்சி அடைந்தது. இஸ்ரேலுக்கும் யூதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்த நினைக்கும் அனைத்து தகவல்களும் மொசாட்டின் தலைமையகத்துக்கு உடனுக்குடன் அறிவிக்கப்படும். உலகின் மிகப் பெரிய உளவு அமைப்புகள் சி.ஐ.ஏ. மற்றும் எம்.ஐ.6 க்கு அடுத்த இடத்தில் மொசாட் உள்ளது.

### சி.ஐ.ஏ. வையே உளவு பார்க்கும் உளவு துறை

இஸ்ரேல் மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் சிறியதொரு நாடு, ஆனால் ராணுவத்தில் உளவு துறையில் அனைத்து நாடுகளுக்கும் முன்னோடி இஸ்ரேல் தான்.

உலகில் உள்ள அனைத்து உளவு அமைப்புகளுக்கும் முன்னோடி என்றே கூறப்படுகிறது இந்த இஸ்ரேல் நாட்டின் மொசாட் உளவு அமைப்பை. உலகிலேயே மிக திறமையான மற்றும் அதிபயங்கரமானதாக அனைவராலும் கருதப்படும் உளவு அமைப்பு மொசாட்.

அமெரிக்காவின் சி.ஐ.ஏ. வையே உளவு பார்க்கும் உளவு துறை தான் மொசாட். ஆனால் அமெரிக்காவிடம் தான் பயிற்சி பெற்றது மொசாட் ஆனால் இப்போது அமெரிக்கா சி.ஐ.ஏ.வே ஆச்சரியப்படும் அளவிற்கு மொசாட் வளர்ந்து உள்ளது.

இஸ்ரேலுக்கு எதிர் காலத்தில் எதிரி ஆவான் என்று மொசாட் யாரையாவது எண்ணினால் ஆரம்பத்திலேயே அந்த அமைப்பை அழித்து விடும். 1972ம் ஆண்டு மியூனிச் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இஸ்ரேல் வீரர்கள், பயிற்சியாளர்கள் 11 பேர் பாலஸ்தீன போராளிகளால் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்திற்குக் காரணமான ஒவ்வொருவரையும் பழிவாங்கி விட்டுதான் இஸ்ரேல் அமைதியானது.

ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாட்டில் இஸ்ரேல் உளவு அமைப்பு மொசாட் மேற்கொண்ட ரகசிய படுகொலை வேட்டையின் பெயர் Operation Wrath of God.

இஸ்ரேல் மிகச் சிறிய நாடாகவே இருந்த போதிலும் அந்த சிறிய நாட்டை பார்த்து பொருளாதாரத்திலும் மக்கட்தொகையிலும் மிகையாக இருக்கும் மேற்குலக நாடுகள் கூட பயப்படுகிறது என்றால் அதற்கு மிக மிக முக்கிய காரணம் மொசாட்.

இஸ்ரேல் மிகச் சிறிய நாடாக இருந்தாலும் கூட எந்த நேரமும் தன்னை அழிக்க காத்துக்



கொண்டிருக்கும் அரபு தேசங்கள் மத்தியில் மிகச் செல்வ செழிப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

### ஹமாஸ் படைப்பலம்:

பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பு செயல்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் இஸ்ரேலில் கட்டுப்பாட்டில் இருந்த இந்த காசா தற்போது ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும் இஸ்ரேலை ஹமாஸ் அமைப்பு காசாவில் நுழைய விடாமல் தடுத்து வருகிறது.

இதனால் காசா பகுதியை கைப்பற்ற இஸ்ரேல் முயற்சிக்கும் நிலையில் ஹமாஸ் தடையாக உள்ளது. அத்துடன் ஹமாஸ் அமைப்பை இஸ்ரேல் தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. மேலும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகள் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் தான் கடந்த சனி (7/10/23) திடீரென்று ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தினர். மேலும் பாராசூட்டில் ஹமாஸ் தீவிரவாதிகள் துப்பாக்கியுடன் இஸ்ரேலுக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

### மொசாட் திண் ஹமாஸ்

இதையடுத்து போர் தொடங்கி உள்ளதாக கூறி இஸ்ரேல் படையினர், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுத்து வருகின்றனர். காசா பகுதிக்குள் நுழைந்து வான்வெளி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

தற்போது போர் தீவிரமாக நடந்து வருகிறது. தற்போது வரை இருதரப்பினரையும் சேர்த்து 1300க்கும் அதிகமானவர்கள் பலியாகி உள்ளனர். மேலும் 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். இந்நிலையில் தான் போர் உக்கிரமடைய உள்ளது.

அதாவது ராணுவம், விமானப்படை, கப்பற்படையை பொறுத்தமட்டில் இஸ்ரேல் மிகவும் வலுவாக உள்ளது. இஸ்ரேலில் ராணுவ வீரர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களாக உள்ளனர்.





மிகுதி 07 ஆம் பக்கத்தில்...

# மொசாட்டை திணரடித்த ஊடக தாக்குதல்!

## ஹமாஸின் அல்- அக்ஸா ஏவுகணை புயல்!!



புதிய தொழில்நுட்பங்களுடன் பல பாதுகாப்பு அமைப்புகளை இஸ்ரேல் கைவசம் வைத்துள்ளது. நவீன உபகரணங்கள், சிறந்த உளவுத்துறை அமைப்பை இஸ்ரேல் வைத்துள்ளது. அதோடு அதிநவீன போர் விமானங்கள் உள்ளன.

அதாவது (IDF)ஐடிஎப் எனும் இஸ்ரேலிய பாதுகாப்பு படை என்பது தரைப்படை, விமானப்படை மற்றும் கடற்படையை ஒருங்கிணைத்துள்ளது. மேலும் இஸ்ரேலை பொறுத்தமட்டில் கட்டாய ராணுவ சேவை என்பது நடைமுறையில் உள்ளது. இதனால் பெரும்பாலான ஆண்கள் ராணுவம், ஆயுத பயிற்சி பெற்றவர்களாக உள்ளனர். மேலும் உலகில் மிகச்சிறந்ததாக கருதப்படும் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கும் அயர்ன் டோம் டிபென்ஸ் சிஸ்டம்' அமைப்பை இஸ்ரேல் வைத்துள்ளது.

### ஏவுகணை பாதுகாப்பு கொண்ட இராணுவம்:

அதேபோல் டேவிட் ஸ்லிங் மற்றும் அரோ போன்ற ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை கொண்ட மேம்பட்ட இராணுவ தொழில்நுட்பங்களை இஸ்ரேல் கைவசம் வைத்துள்ளது. கடற்படையை பொறுத்தமட்டில் ஏவுகணை தாங்கும் கப்பல், நீர்மூழ்கி கப்பல் உள்ளிட்டவற்றை இஸ்ரேல் வைத்துள்ளது.

ஆனால் இஸ்ரேலை ஒப்பிடும்போது பாலஸ்தீனத்தின் படைப்பலம் என்பது ஒருங்கிணைந்ததாக இல்லை. காசாவில் ஹமாஸ் படையும், மேற்கு கரைப்பகுதியில் பாலஸ்தீனத்தின் படையும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதில் சில துணை ராணுவப் படைகள் இருந்தாலும் பயிற்சி, தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் பார்த்தால் இஸ்ரேலை ஒப்பிடும்போது பாலஸ்தீனத்தின் படை பின்தங்கி உள்ளது.

இதுதவிர இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளுடன் நல்ல உறவை வைத்துள்ளது. அமெரிக்காவும் கூட தொடர்ந்து இஸ்ரேலுக்கு ஆதரவாக தான் உள்ளது. பாலஸ்தீனம் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு மேலை நாடுகளின் ஆதரவு இல்லை. குறிப்பிட்ட சில முஸ்லிம் நாடுகள் மட்டுமே பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக உள்ளன.

மேற்கூறிய இந்த விஷயங்களின் அடிப்படையில் பார்த்தால் பாலஸ்தீனத்தை ஒப்பிடும்போது ராணுவ பிரிவில் இஸ்ரேலின் கை ஓங்கி உள்ளது. ஆயினும் இஸ்ரேலின் முக்கிய உளவு அமைப்பை மீறி அவர்கள் தாக்குதல் நடத்தி இருப்பதோடு, இஸ்ரேலின் முக்கிய படை தளபதியான 'நிர்மோத் அலோனியை ஹமாஸ் தீவிரவாதிகள் போரக்கைதியாக பிடித்து வைத்துள்ளனர். இவர் தான் காசாவின் கட்டுப்பாட்டு படைப்பகுதித் தலைவராகவும் சில காலம் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இது இஸ்ரேலுக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

### மொசாட் ஏமாற்றி தாக்குதல் நடத்திய ஹமாஸ்:

ஹமாஸ், இந்தப் பெயர் இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம் என்பதன் அரேபியச் சுருக்கத்தில் இருந்து பெறப்பட்டது. மேற்குக் கரையையும் காசா நிலப் பகுதியையும் ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய முயற்சிக்கு எதிரான முதல் பாலஸ்தீன எழுச்சி தொடங்கிய பிறகு 1987-ஆம் ஆண்டில் உருவானது ஹமாஸ். இஸ்ரேலை அழிப்பதே தங்களது நோக்கம் என இதன் சாசனம் கூறுகிறது.

ஹமாஸ் இரு வேறு பணிகளைச் செய்து வருகிறது. ஒன்று இஸ் அட்-டின் அல்-காசம் என்ற தனது ராணுவப் பிரிவின் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவது. மற்றொன்று நலத்திட்டங்கள் மூலம் சமூகப் பணிகளைச் செய்வது.

### ஹமாஸ் அரசியல் நடவடிக்கைகள்:

2005-ஆம் ஆண்டில் காசா பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு ஹமாஸ் இயக்கம் அரசியல் நடவடிக்கைக



ளில் இறங்கியது. 2006-ஆம் ஆண்டு நடந்த பாலஸ்தீன தேர்தலில் ஹமாஸ் இயக்கம் வெற்றி பெற்றது. கூட்டணி அரசிலும் பங்கேற்றது. அதிபர் முகமது அப்பாஸின் ஃபதா இயக்கத்தைப் பகைத்துக் கொண்டதால் அரசில் இருந்து வெளியேற்றப்பட்டு காசாவுக்குள் முடங்கியது.

அதன் பிறகு இஸ்ரேலுடன் மூன்று பெரிய போர்களில் காசா பகுதியில் ஈடுபட்டிருக்கிறது. இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே அடைபட்டிருக்கும் காசா பகுதிக்குள் ஹமாஸ் இயக்கத்தை தனிமைப்படுத்துவதற்காகவும் தாக்குதல்களைத் நிறுத்தவதற்காகவும் இஸ்ரேல் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### இரண்டாவது பாலஸ்தீன எழுச்சி:

இரண்டாவது பாலஸ்தீன எழுச்சியின் தொடக்க ஆண்டுகளில் ஹமாஸ் இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதல்களை பாலஸ்தீனர்கள் பரவலாக ஆதரித்தனர். அவற்றை தியாக நடவடிக்கைகள் என்று அவர்கள் கருதினார்கள். மேற்குக் கரையில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குப் பழிவாங்கப்படுவதாக எண்ணினார்கள்.

2004-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஹமாஸ் மதத் தலைவர் ஷேக் அகமது யாசின் மற்றும் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த அப்துல் அஜீஸ் அல்-ரேன்டிஸ்ஸி ஆகியோரை ஏவுகணைகள் மூலம் கொன்றது இஸ்ரேல். அதே ஆண்டில் ஃபதா இயக்கத்தின் தலைவர் யாசர் அராஃபத் மரணமடைந்தார்.

அதன்பின் பாலஸ்தீன நிர்வாகத்துக்கு முகமது அப்பாஸ் தலைவராக நியமிக்கப்பட்டார். ஹமாஸின் ராக்கெட் தாக்குதல்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதாகக் கருதக்கூடியவர் அவர்.

### நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் வெற்றி:

2006-ஆம் ஆண்டு நடந்த பாலஸ்தீன நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் இயக்கம் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. ஃபதா இயக்கத்துக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் அதிகார மோதல் தொடங்கியது.

தேர்தலில் வெற்றிபெற்றிருந்த ஹமாஸ் இயக்கம், அதற்கு முன் பாலஸ்தீன நிர்வாகத்தால் கையெழுத்திடப்பட்டிருந்த அனைத்து உடன்பாடுகளையும் எதிர்த்தது. இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிப்பது உள்ளிட்டவையும் அவற்றில் அடங்கும். இஸ்ரேல் என்றொரு நாட்டை அங்கீரிப்பதாயில்லை. ஆனால் காசா, மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பாலஸ்தீன நாட்டை உருவாக்குவதை ஒப்புக் கொண்டது.

ஹமாஸின் சண்டை, யூதர்களுக்கு எதிரானதல்ல, 'ஸியோனிச ஆக்கிரிப்பாளர்களுக்கு' எதிரானது என்கிறது ஹமாஸின் புதிய ஆவணம். ஆனால் இஸ்ரேல் இதை ஏற்கவில்லை. உலகை ஏமாற்றும் முயற்சி என்று விமர்சித்தது.

### அரசியல் - பொருளாதாரத் தடைகள்:

ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேலும் அதற்கு ஆதரவான மேற்கு நாடுகளும் பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

2007-ஆம் ஆண்டு காசா நிலப் பகுதியில் இருந்து ஃபதா இயக்கத்துக்கு ஆதரவான படைகளை ஹமாஸ் இயக்கம் வெளியேற்றியது. பதிலடியாக காஸாவின் எல்லைகளில் தடைகளைக் கடுமையாக்கியது இஸ்ரேல். ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலை நோக்கி ராக்கெட்டுகளை ஏவியது. இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

காசா பகுதியில் இருந்து நடத்தப்படும் அனைத்து ராக்கெட் தாக்குதல்களுக்கும் ஹமாஸ் இயக்கமே காரணம் என்கிறது இஸ்ரேல். இதுவரை காசா பகுதிக்குள் மூன்று முறை ராணுவ நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கிறது.

2014-ஆம் ஆண்டில் இருந்து அவ்வப்போது சண்டைகள் தொடங்குவதும் எகிப்து, கத்தார், ஐ.நா. போன்றவற்றின் தலையீட்டில் நிறுத்தப்படுவதுமாக பலமுறை நடந்திருக்கிறது. முழு அளவிலான போர் எதுவும் வெடிக்கவில்லை.

காசா பகுதியைச் சுற்றி கடுமையான தடைகளை இஸ்ரேல் விதித்திருந்தாலும், ஹமாஸ் இயக்கம் காசாவை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. ராக்கெட்டின் வலிமையையும் அதிகரித்திருக்கிறது. ஃபதா இயக்கத்துடனான அமைதி முயற்சிகளும் தோல்வியடைந்துவிட்டன.

அதே நேரத்தில் காசா பகுதியில் வசிக்கும் சுமார் 20 லட்சம் பாலத்தீன மக்களின் நிலைமை மோசமடைந்திருக்கிறது. பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது. குடிநீர், மின்சாரம், மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. பாரிய அழிவின் விளிம்பில் போருக்கு முகங்கொள்ள அப்பாவி பாலஸ்தீன மக்களும் தள்ளப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும்.

# 'யாழ். மாவட்ட சந்தைகளில் நடைமுறையில் உள்ள 10 வீத கழிவினை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவு'

யாழ். மாவட்டத்தில் உள்ள சந்தைகளில் நடைமுறையில் உள்ள 10 வீத கழிவினை உடனடியாக நிறுத்துமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாய குழு கூட்டத்தின் போதே அவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சில சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து 10 வீத கழிவு அறவிடும் நடைமுறை செயற்படுத்தப்பட்டு வருகின்றதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக திருநெல்வேலி, மருதனார்மடம், சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் விவசாயிகளிடம் கழிவு அறவிடும் நடைமுறை இடம்பெற்று வருகின்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த சந்தைகளில் விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டு அவர்களிடம் இந்த கழிவு அறவிடப்படுகின்றது.

விவசாயிகள் இது தொடர்பில் முறைப்பாட்டினை பதிவு செய்வதில் தயக்கம் காட்டுவார்கள்.

எனவே பொதுவான தீர்மானமாக பொதுவான முறைப்பாடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொலிஸார் இதனை தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் உத்தரவிட்டார்.

அத்துடன் குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த வடக்கு ஆளுநர்,

குறித்த சம்பவத்தினை பொலிஸாரால் மாத்திரம் தடுத்து நிறுத்த முடியாது.

இதற்கு பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

கழிவு நடைமுறை தொடர்பிலான சகல தகவல்களையும் பொலிஸாருக்கு வழங்கினால் பொலிஸாரினால் அதனை கட்டுப்படுத்தி சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு இலகுவாக இருக்கும். என தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் காலங்களில் பிரதேச சபைகள் சந்தைகளை குத்தகைக்கு வழங்கும் போது இந்த கழிவு நடைமுறை அமுல்படுத்த கூடாது என்ற நிபந்தனையும் பின்பற்றியே வழங்க வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

## பேசும் படம்....



இஸ்ரேல் தாக்குதலில் நொறுங்கிய வீட்டின் முன் பாலத்தீனர் கதறி அழும் காட்சி.



# மணிப்பூரைவிட இஸ்ரேலில் என்ன நடக்கிறது என்பதில் ஆர்வமாக இருக்கிறார் மோடி!

## ராகுல் காந்தி சாடல்

‘மோடியும், அவர் தலைமையிலான இந்திய அரசும் மணிப்பூரில் என்ன நடக்கிறது என்பதில் சிறிதும் அக்கறை காட்டாதது ஆச்சர்யமாக இருக்கிறது.’ - ராகுல் காந்தி

இந்த ஆண்டு மே மாதம் கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் தீவிரமாகப் பிரசாரம் மேற்கொண்ட சமயத்தில்தான், மணிப்பூர் வன்முறை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. ஐந்து மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னும் அந்த வன்முறைத் தீ அணையவுமில்லை, இரட்டை இன்ஜின் பா.ஜ.க அரசு அதை அணைக்கவுமில்லை. வன்முறையில், பழங்குடியினப் பெண்கள் இருவர் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்ட வீடியோ வெளியாகி, உலக அரங்கில் இந்தியாவுக்குத் தலைக்குனிவு ஏற்பட்டபோதும்கூட மணிப்பூரைப் பற்றி மௌனம் காத்துவந்தார் பிரதமர் மோடி.

பின்னர், மணிப்பூர் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பா.ஜ.க அரசுமீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த பிறகு, ‘மணிப்பூரில் அமைதி திரும்பும். நாடு மணிப்பூருடன் நிற்கிறது’ என்று மோடி கூறினார். மோடி இதைக் கூறியே கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. ஆனாலும், மணிப்பூரில் வன்முறை இன்னும் கட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், வன்முறை தொடங்கி இன்றுவரை ஒருமுறைகூட மோடி மணிப்பூருக்குச் செல்லவுமில்லை. இவ்வாறிருக்க, கடந்த வாரம் இஸ்ரேலில், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் குழு தாக்குதல் நடத்திய அடுத்த நாளே, ‘இந்தியா இஸ்ரேலுக்கு ஆதரவாக நிற்கும்’ என்றார் மோடி. இத்தகைய நிலைப்பாடு வெளிவந்த அடுத்த சில தினங்களில், ‘ஆக்கிரமிப்பு நிலத்திலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும்’ என 1977-ல் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக வாஜ்பாய் கூறியது வைரலானது.

இந்த நிலையில், மணிப்பூரைவிட இஸ்ரேலில் என்ன நடக்கிறது என்பதில் மோடி ஆர்வமாக இருப்பதாக, காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி விமர்சித்திருக்கிறார். மிசோராம் மாநிலத்தில், அடுத்த மாதம் சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவிருப்பதை முன்னிட்டு, அங்கு இரண்டு நாள்கள் பயணம் மேற்கொண்டிருக்கிறார் ராகுல் காந்தி.

மிசோராமின் ஐஸ்வாலில் இன்று நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய ராகுல் காந்தி, ‘இஸ்ரேலில் என்ன நடக்கிறது என்பதில் ஆர்வமாக இருக்கும் மோடியும், அவர் தலைமையிலான இந்திய அரசும், மணிப்பூரில் என்ன நடக்கிறது என்பதில் சிறிதும் அக்கறை காட்டாதது எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. மணிப்பூர் என்ற எண்ணமே பா.ஜ.க-வால் அழிக்கப்பட்டுவிட்டது. மணிப்பூர் தற்போது இரண்டு மாநிலங்களாக இருக்கிறது. அங்கு, குழந்தைகள் உட்பட பொதுமக்கள் கொல்லப்பட்டனர், பெண்கள் பாலியல் வன்கொடுமைக்குள்ளாகினர். ஆனாலும், அங்கு செல்வதை முக்கியமாகக் கருதவில்லை மோடி. இன்றுவரை மோடி அங்கு செல்லாதது மிகவும் வெட்கக்கேடு. மணிப்பூரில் நடந்தது, இந்தியா என்ற எண்ணத்தின்மீதான தாக்குதல்’ என்று கூறினார்.

# விஜய் படத்திற்கு தி.மு.க அரசு திட்டமிட்ட நெருக்கடி

## நாம் தமிழர் கட்சி சீமான் கடும் விசனம்





**ஆருணியா**

லியோ படத் திரையரங்குகளுக்கு எனத் தனியாகக் காவலர்கள் பாதுகாப்பு என்பது தேவைற்றது ஒன்றாகும் . ஏன் இதைப் போன்று ‘ஜெயிலர்’ படம் திரையிடும்போது திரையரங்குகளுக்கு பாதுகாப்பு போடவில்லை ஆனால் விஜய் நடித்த ‘லியோ’ படத்தின் சிறப்பு அதிகாலைக் காட்சிகளுக்கு அனுமதி வழங்கப்படாதது குறித்து ‘சீமான்’ அவர்கள்

தி மு க அரசுக்கு ‘லியோ’ படத்தின் சிறப்புக் காட்சி தொடர்பாகச் சில விடயங்களைச் சுட்டிக்காட்டி தெளிவுபடுத்தியுள்ளர்

அதில், நாள் ஒன்றிற்கு 5 காட்சிகள் வீதம் என மொத்தம் 6 நாட்களுக்கு அதாவது, 19-ம் தேதி முதல் 24-ம் தேதி வரை மட்டுமே அனுமதியுடன் அனைத்து திரையரங்குகளிலும் ஒரே ஒரு சிறப்புக் காட்சி மட்டுமே திரையிட வேண்டும் எனவும் காலை 9 மணி முதல் நள்ளிரவு 1.30 மணி வரையான நேரத்தில் மட்டுமே காட்சிகள் திரையிடப்பட வேண்டும் எனவும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

காலை 7 மணி அல்லது 8 மணிக்குச் சிறப்புக் காட்சிகள் இருக்கும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்த நிலையில் விடுமுறை நாள்களிலும் 9 மணிக்குத்தான் முதல் காட்சி என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கை விஜய் ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நடிகர் விஜய்க்குத் தொடர்ந்து ஆதரவளித்துப் பேசி வரும் ‘நாம் தமிழர் கட்சி’ ஒருங்கிணைப்பாளர் சீமான், அவர்கள் விஜய்யின் ‘லியோ’ படத்தின் அதிகாலை சிறப்புக் காட்சிகளுக்கு அனுமதி வழங்கப்படாதது குறித்து தி.மு.க அரசு மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்துச் சாடியுள்ளார்.

சீமான் இதுபற்றி தெரிவித்ததாவது, ‘லியோ’ படத்தை வைத்து தி மு க அரசு அரசியல் செய்யவில்லை என்று சொல்வதே ஒரு அரசியல்தான். இதற்கு முன்பு வெளியான படங்களுக்கு எல்லாம் ஏன் இவ்வளவு நெருக்கடி கொடுக்கவில்லை? திரையரங்குகளுக்கு என தனியாகக் காவலர்கள் பாதுகாப்பு எல்லாம் தேவைற்ற வேலை. இதேபோல ஏன் ‘ஜெயி



லர்’ படத்துக்குச் செய்யவில்லை? தி.மு.க அரசு திட்டமிட்டே விஜய்க்கு நெருக்கடி கொடுப்பது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இதற்கு முன்பு வெளியான விஜய் படங்களுக்கு இவ்வளவு நெருக்கடி ஏற்பட்டது இல்லை. என்பதை கருத்திற் கொண்டால் தற்போது தி மு க அரசின் இந்த நிலை சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது சினிமா வியாபாரம் பெருகிவிட்ட நிலையில், சிறப்புக் காட்சிகள் இருந்தால்தான் அதிஜ லாபம் கிடைக்கும். அதையே ஒழுங்கு முறைப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் நாம் தமிழர் கட்சி ஆட்சிக்கு வரும்போது அதை நாங்கள் சீரமைப்போம்’ என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மேலும் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டவரைவு ஆபத்தானது; மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை

இலங்கை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு இப்போது பாராளுமன்றத்தின் பரிசீலனையில் இருக்கும் இரண்டு சட்டவரைபுகள், சர்வதேச நியமங்களின் அடிப்படையில் இல்லை என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கூறியுள்ளது.

அண்மையில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் பேச்சாளர் ரவிணா ஷம்தாசனி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இலங்கையில் மனித உரிமைகள் பதுகாப்பு தொடர்பில் தமது அச்சம் மற்றும் ஏமாற்றத்தை கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தின் பரிசீலனையில் இருக்கும் இரண்டு சட்டவரைபுகள் - பயங்கரவாதத்திற்கு எதிராக திருத்தப்பட்ட சட்டம் மற்றும் இணையதள பாதுகாப்பு-அதிகாரிகளுக்கு பரந்துபட்டளவில் மிகவும் கூடிய அதிகாரங்களை அளிக்கிறது.

மேலும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு முரணாக, மனித உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடும் என்பது குறித்து எமக்கு ஆழ்ந்த கவலைகள் உள்ளன.

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டவரைவு மிகவும் சர்ச்சைக்குரியதும் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியும், சிறுபான்மையினர் மீது ஒரு ஒடுக்குமுறைக்கான ஒரு ஆயுதமாகவும் பயன்படுத்தப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு மாற்றாக கொண்டுவரவுள்ளது.

மேலும் அந்த சட்டம் ஒப்பீட்டளவில் அதிகமாக சிறுபான்மையினருக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகிறது.

பயங்கரவாத தடைச் சட்டம் ஐ நா மனித உரிமைகள் வழிமுறைகளுக்கு அமைவாக இல்லை என்கிற கவலை நீண்டகாலமாக இருந்துள்ளது என்று ஷம்தாசனியின் அறிக்கை கூறுகிறது.

புதிய சட்டவரைவில் மரண தண்டனையை ஒழிப்பது என்பது போன்ற சில ஏற்பாடுகள் உள்ளன என்றாலும், புதிய சட்டவரைபில் உள்ள பாரபட்சங்கள் தொடர்பில் சில கவலைகள் இன்னும் உள்ளன.

இந்த சட்டவரைவில் பயங்கரவாதம் என்பதற்கு வெளிப்படையாகவே மிகைப்படுத்தபப்ட்ட விளக்கம் உள்ளடக்கப்பட்டுள்ளது மேலும் எவ்விதமான சட்ட மேற்பார்வையுமின்றி பொலிசார் மற்றும் இராணுவத்தினருக்குக்கு-தடுத்து நிறுத்த, விசாரிக்க, சோதனையிட மற்றும் மக்களை தடுத்துவைக்க, கைது செய்ய மிகவும் பரந்துபட்ட அதிகாரங்கள் உள்ளன என்று அவரது அறிக்கை மேலும் கூறுகிறது.

ஊரடங்கை நடைமுறைப்படுத்துவது, தடை உத்தரவுகளை பிறப்பிப்பது மற்றும் இடங்களை தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக அறிவிப்பது போன்ற பிரச்சினைகளும் உள்ளன. இவை அனைத்தும் போதுமான பொறிமுறைகள் இன்றி அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் அளிப்பதும் கவலைகளை ஏற்படுத்துகின்றன.

இணையதள பாதுகாப்பு சட்டவரைவை பொறுத்தவரையில், அது இணையத்தில் தொடர்பாடல்களை கடுமையாக கட்டுப்படுத்தும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் நம்புகிறது. அதில் பொதுமக்கள் கூறும் விடயங்களை போலி வாக்குமூலங்கள் என முத்திரைகுத்தி அதிகாரிகள் கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தக் கூடியதும் அடங்கும்.

இந்த சட்டவரைபில் தெளிவில்லாத பல பகுதிகள் காணப்படுவதாகவும், குற்றங்களுக்கான சில விளக்கங்கள் தன்னிச்சையான மற்றும் தாம் விரும்பியபடி வியாக்கியானம் அளிப்பதற்கு கணிசமானளவிற்கு இடம் கொடுக்கிறது எனவும், அது அனைத்து வகையான நியாயமான கருத்து வெளிப்பாடுகளையும் குற்றமயமாக்கும் சாத்தியங்களை ஏற்படுத்தி, கருத்துச் சுதந்திரத்தின் மீது குரல்வளையை நெறிக்கும் அளவிற்கு இறுக்கமான பிடியை மேற்கொள்வதற்கான மோசமான சூழலை ஏற்படுத்தக்கூடும் எனவும் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இலங்கை அரசு மேலும் அர்த்தமுள்ள வகையில் சிவில் சமூகம், மற்றும் ஐ.நாவின் சுயாதீன நிபுணர்கள் ஆகியோருடன் மேலும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அந்த சட்டவரைவுகளில் கணிசமான திருத்தங்களை மேற்கொண்டு, சர்வதேச மனித உரிமைகள் தொடர்பில் இலங்கைக்கு உள்ள கடப்பாடுகளை முழுமையாக ஏற்று நடக்கும் வகையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் ஐ நா மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

# தூக்கமின்றி மக்கள் வீதியில் படுத்துறங்கும் தலைமைகள்

மட்டக்களப்பு மாதவன மயிலத்தமடு பிரதேசத்தில் அத்துமீறிய சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேற்றுவது தொடர்பாக ஜனாதிபதி ரணிலுடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண ஆளுநர், மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மகாவலி அதிகாரசபை, இராணுவம், காவல்துறையினர் போன்றவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது முக்கிய விடயங்கள் பேசப்பட்டிருந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் சி சந்திரகாந்தன் உறங்கிய நிலையில் இருக்கும் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகின்றது.

முக்கிய கலந்துரையாடலின் போது மாதவனை மயிலத்தமடு பகுதியில் தற்போது இடம்பெற்று வரும் சிங்கள பேரினவாதிகளின் அராஜகம் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிபருக்கு தெளிவுபடுத்தி இருந்தபோது இராணுவம் காவல்துறையினர் சேர்ந்து முகாம் ஒன்றை அமைத்தால் பிரச்சனைக்கு தீர்வு காணலாம் என்று முட்டாள்தனமான பரிந்துரைகளை சந்திரகாந்தன் தெரிவித்ததாகவும் சாணக்கியன் குற்றச்சாட்டியுள்ளார்.

அதேபோன்று மட்டக்களப்பு மாதவன மயித்தமடு பண்ணையாளர்களும் பலதடவை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பல பொய் உறுதிகளை மொழிவழங்கி உள்ளதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### "இந்த பூமியில் வாழ முடியாது"

# கிளிநோச்சியில் கடிதம் எழுதிவிட்டு உயிரிழந்த இரு சிறுமிகள்

கிளிநொச்சியில் இரு சிறுமிகள் தவறான முடிவெடுத்து உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியபரந்தன்12 ஏக்கர் பகுதியில் வசிக்கும் 17 வயதுடைய இரண்டு சிறுமிகள் கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் உயிரிழந்த 17 வயதுடைய இரண்டு சிறுமிகளும் தம்மால் இந்த பூமியில் வாழ முடியாது என தெரிவித்து தமது இறப்புக்கு காரணம் தாங்கலே என கடிதம் ஒன்றை இருவரும் அதில் கையொப்பம் இட்ட நிலையில் குறித்த கடிதம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. இரண்டு சிறுமிகளும் தற்பொழுது க.பொ.த சாதாரணப் பரீச்சைக்கு தோற்றி பெறுபேறுக்காக காத்திருந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மலையாள மொழியில் நடுகல்




ஈழத்து கவிஞர், எழுத்தாளர் தீபச்செல்வனின் நடுகல் நாவல் மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வருவதாகவும் விரைவில் வெளியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மலையாள எழுத்தாளர் ஷாபியின் மொழிபெயர்ப்பு பணிகள் குறித்து சன் நியூஸ் வெளியிட்டுள்ள செய்தியில் தொடக்கத்தில் இருந்து முடிவுவரை எழுத்தாளர் ஷாபி நடுகல் நாவலை கையில் வைத்திருக்கும் காட்சி வெளியாகி இருந்தது.

பல இந்திய தமிழ் எழுத்தாளர்களின் நாவல்களை மலையாளத்தில் மொழிபெயர்த்து பெரும் பாராட்டைப் பெற்று வரும் எழுத்தாளர் ஷாபி ஒரு கட்டடத் தொழிலாளி. இவர் ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வனின் நடுகல் நாவலுடன் குறித்த தொலைக்காட்சிச் செய்தியில் காணப்பட்டார்.

இது குறித்து தீபச்செல்வன் குறிப்பிடுகையில், மலையாள எழுத்தாளர் ஷாபி நடுகல் நாவலை மொழிபெயர்த்து வருவதாகவும் விரைவில் நாவல் மலையாளத்தில் வெளியாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன் தொடர்ந்தும் பயங்கரவாதி நாவலையும் அவர் மொழியாக்கம் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தீபச்செல்வன் எழுதியுள்ள நடுகல் நாவல் பல ஆயிரம் பிரதிகள் விற்பனை கண்டதுடன் உலகத் தமிழர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

அத்துடன் சிங்களத்திலும் நாவல் மொழிபெயர்க்கப்பட்டு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. குறித்த நாவல் ஆங்கிலத்திலும் வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.,முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு சவால் விடும் Pick Me

சம காலப்பரப்பில் யாழ்ப்பாணத்தில் முச்சக்கரவண்டிகளினூடாக இலகுவில் சேவையை பெறுவதற்காக Pick Me செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக ஏற்படும் சாதக பாதகங்களும் இன்று பேசுபொருளாகியுள்ளது.

இந் நிலையில் கடந்த வாரம் குறித்த செயலிக்கு எதிராக போராட்டம் ஒன்றும் யாழில் இடம்பெற்றுள்ளது.

தற்போது நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள் முதற்கொண்டு ஏனைய பொருட்கள் சேவைகளுக்கான விலை மற்றும் கட்டணங்கள் மக்களின் வாழ்க்கை செலவில் பாரிய தளம்பலை ஏற்படுத்தியுள்ளது. பொருட்கள் சேவைகளின் விலை.மற்றும் கட்டண அதிகரிப்பிற்கு எரிபொருட்களின் விலை அதிகரிப்பும் தாக்கம் செலுத்தும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

எமது நாட்டில் விலை மற்றும் கட்டணங்களை நிர்ணயிக்கவும் அதனை தொடர்ந்தும் கண்காணிக்கவும் அந் நடவடிக்கைகளுக்கு உட்படாதவர்களுக்காக உரிய சட்ட நடவடிக்களை மேற்கொள்வதுமான நடவடிக்கைகளும் காணப்படுகின்றது.

இவற்றுக்குரிய திணைக்களத்தின் சேவை பூரணமாக இல்லாமலிருப்பினும் ஒப்பீட்டளவில் காணப்படுகின்றது. ஆயினும் முச்சக்கரவண்டி முதலான வாகனங்களில் சேவையைப் பெறும் போது சேவை பெறுநர் செலுத்தும் கட்டணங்களின் நிர்ணயக் கட்டணங்களை அறவிட்டு அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலை தொடர்கின்றது.

குறிப்பாக முச்சக்கரவண்டிகளின் பயண கட்டணம் தொடர்பில் நீண்ட காலமாக பயணிகள் மத்தியில் பல விமர்சனங்கள் காணப்படுகின்றன. பயணிகள் சேவையைப் பெறுவதற்கு ஆரம்ப இடத்திலிருந்து தாம் செல்ல வேண்டிய இடத்திற்குச் சென்று மீள தமது இடத்திற்கு வருவதற்கான சேவையை ஒருவர் பெறும் போது பயணிகள் பயணம் செய்த தூரத்திற்கே கட்டணம் அறவிடுதல் நியாயமானது.. மாறாக இதுவரை காலமும் முச்சக்கரவண்டி சாரதிகள் தாம் சேவையை வழங்குவதற்காக பயணியின் இடத்தை வந்தடையும் தூரத்திற்கும் இணைத்து கட்டணம் அறவிடும் நிலை காணப்பட்டது.

இவற்றை ஒரு ஒழுங்கிற்கு கொண்டுவரும் வகையில் அண்மையில் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் முச்சக்கர வண்டிகளுக்கு பயண அளவுமானி பொருத்துதல் கட்டாயமானது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பிரகாரம் பல முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் அதனை பொருத்தியிருந்தனர். குறித்த மானியைப் பொருத்துவதற்கு பெருந்தொகை செலவு ஏற்படுவதை காரணங் காட்டி பலர் அந்த நடைமுறைக்குட்படாது தமது சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தும் வந்தனர்.

ஆனால் மாவட்ட அரசாங்க அதிபரால் மீற்றர் பொருத்துவது கட்டாயம் என வலியுறுத்தப்பட்டும் அது முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன் அந் நடைமுறைக்குக் கீழ் செயற்படுகின்றார்களா என கண்காணிப்புக்கு உட்படுத்தப்படவுமில்லை.

இது இவ்வாறிருக்கையில் சில மாதங்களுக்கு முன் யாழில் Pick Me என்ற நிகழ்நிலை செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஆரம்பத்தில் இது தொடர்பிலான விழிப்புணர்வு மக்களிடையே காணப்படாவிட்டாலும் தற்சமயம் இது வரவேற்பைப் பெற்றுள்ளதுடன் இச் செயலியை பொதுமக்கள் தமது தொலைபேசிகளில் தரவிறக்கம் செய்து உபயோகிக்குமளவிற்கு இலகுவான முறையாகவுள்ளது. குறிப்பாக பயணி குறித்த செயலியூடாக தான் பயணம் செய்யும் தூரத்தை தேர்வு செய்யுமிடத்து பயணியின் பயண ஆரம்பத்திற்கு அண்மிய பகுதியிலுள்ள முச்சக்கர வண்டியூடாக சேவையினைப் பெறும் வாய்ப்புள்ளது.

இச் செயலியைப் பயன்படுத்தி சேவையைப் பெற்றுக் கொள்ளும் போது கட்டணமும் மிக மிகக் குறைவாகவுள்ளது. இதனால் பிரயாணிகளும் குறித்த செயலியூடான முச்சக்கரவண்டியில் சேவையைப் பெறுவதிலே அதிக நாட்டத்தைக் கொண்டுள்ளனர். இந் நிலையில் ஒரு பகுதி முச்சக்கரவண்டி சாரதிகளே இச் செயலியை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் ஏனையவர்கள் வழமை போலான தமது கட்டணப்படி சேவையை தொடர்ந்தனர். மக்கள் ஏற்கனவே உள்ள கட்டண முறையில் சேவையை வழங்கும் முச்சக்கரவண்டிகளூடான சேவையை பெறுவதை புறக்கணித்த நிலையில் முச்சக்கரவண்டி சங்கங்களூடாக குறித்த செயலியை உபயோகிக்கும் முச்சக்கரவண்டி சாரதிகளுக்கெதிராக எதிர்ப்பு நிலை உருவாக்கப்பட்டது.

இந் நிலையில் கடந்த வாரம் யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள தூர இடங்களுக்கான பேரூந்து தரிப்பிடத்திலிருந்து ஆரம்பமான பேரணியானது கடற்தொழில் அமைச்சரின் அலுவலகத்தில் நிறைவடைந்து தமது பிரச்சினைகள் அடங்கிய மகஜரையும் கையளித்தனர். எது எவ்வாறாயினும் மக்கள் தற்பொழுது பொருளாதார நெருக்கடியால் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில் குறைந்த கட்டணம் ஊடாக சேவையினைப் பெறுவதிலே ஆர்வம் காட்டுவார்கள் என்பதே யதார்த்தம்.

இவ்வாறிருக்கையில் குறித்த செயலி ஊடான பயண சேவையைப் பெறுதல் மக்களுக்கு சமகாலத்தில் அமைந்த வாய்ப்பாகவுள்ளது. எனவே இந் நிலையை குறித்த செயலியை எதிர்க்கும் முச்சக்கரவண்டிச் சங்கங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதுவரை காலமும் தாம் தான் சேவையை வழங்கினோம் என்று கூறுபவர்கள் தற்போது மக்கள் உள்ள நிலைமைகளையும் உணர்ந்தவர்களாய் செயற்பட வேண்டும்.

எனவே எந்தவொரு தரப்பும் கடந்த காலங்களில் பொதுமக்களின் பக்கம் நின்று சிந்தித்திருந்தால் இவ்வாறானதொரு மாற்று தெரிவின் மேல் மக்கள் நாட்டம் காட்டியிருக்க மாட்டார்கள். எனவே மக்கள் தமக்குச் சாதகமான சேவைக்குப் தம்மை பழக்கப்படுத்திக்கொள்ளத் தயாராகியுள்ள நிலையில் அதனை எதிர்க்கும் தரப்பிலும் மக்களின் நலன்களை கருத்திலெடுத்து சேவையை வழங்க முற்படுவார்களாயின் எந்தவொரு தரப்பினரும் பாதிப்புக்குள்ளாக வேண்டிய அவசியமில்லை.

வெளிவரும்

தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

NEWSPAPER SIZES, RATE PER EDITION

WEEKLY NEWSPAPER

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Inner Page Box Ad | 3000/= | Front Page Top | 5000/= |
| Front Inner Page Bottom | 4000/= | Front Page Bottom | 8000/= |
| Back Inner Quarter Page | 8000/= | Back Quarter Page | 13000/= |
| Back Inner Half Page | 12000/= | Back Half Page | 16000/= |
| Inner Quarter Page | 5000/= | Back Full Page | 24000/= |
| Inner Half Page | 7500/= | Inner Quarter Page | 10000/= |
| Inner Full Page | 10000/= | Inner Half Page | 14000/= |
| Inner Box Ad | 1000/= | Inner Full Page | 16000/= |
| | | Inner Box Ad | 3500/= |

Tel : 021 221 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com

# தமிழர்கள் மீதான இனவெறி வன்மத்தின் வெளிப்பாடே இலங்கைக் கடற்படையின் வன்முறைத் தாக்குதல்

## சீமான் சீற்றம்

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள 27 தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்களையும் , அபகரிக்கப்பட்டுள்ள படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இலங்கை இனவாத அரசினுடைய கடற்படை கடந்த 14.10.2023 அன்று அதிகாலையில் இராமேஸ்வரத்தை சேர்ந்த 27 கடற்றொழிலாளர்களை அத்துமீறி கைது செய்திருப்பதோடு, அவர்களது 5 விசைப்படகுகளையும் அபகரித்துள்ளது வன்மையான கண்டனத்திற்குரியது என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அந்த அறிக்கையில், இனவெறி சிங்கள கடற்படையால் தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்கள் தொடர்ச்சியாக கைதுசெய்யப்படும் கொடுமைகள் தொடர்ந்து வருவது இந்திய ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகளின் கையாலாகாத்தனத்தையே காட்டுகிறது.

தமிழக கடற்றொழிலாளர்களின் படகுகளைப் பறித்துக்கொள்வது, வலைகளை அறுப்பது, படகுகளைச் சேதப்படுத்துவது, உடைமைகளைப் பறித்துக்கொள்வது, கடற்றொழிலாளர்களைச் சிறைப்பிடிப்பது, துப்பாக்கிச்சூடு நடத்துவது என இலங்கை கடற்படை அரங்கேற்றிவரும் ஈவிரக்கமற்ற வன்முறை தாக்குதல்கள் யாவும் தமிழர்கள் மீதான இனவெறி வன்மத்தின் வெளிப்பாடேயாகும். இலங்கை கடற்படையினரின் தாக்குதலில் இதுவரை பல்லாயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் உடல் உறுப்புகளைச்சிதையக் கொடுத்துள்ளதோடு, 800க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் நடுக்கடலிலே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தமிழக கடற்றொழிலாளர்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், இலங்கை இராணுவத்தின் இக்கோரத் தாக்குதல்களுக்கு இதுவரை இந்திய ஒன்றிய அரசு கண்டனம் தெரிவித்ததுமில்லை.

எவ்வித எதிர்வினையும் ஆற்றியதுமில்லை. பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் தமிழக கடற்றொழிலாளர்களின் மீதான தாக்குதல்களை இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு வேடிக்கைப் பார்ப்பது வெட்கக்கேடானது.

பாஜகவும், திமுகவும் தமிழக கடற்றொழிலாளர்கள் அழிக்கப்படுவதை கைகட்டி வேடிக்கை மட்டுமே பார்த்து வருகின்றன. கூட்டணி பலத்துடன் சேர்த்து 38 நாடாளுமன்ற உறுப்பினர்களை திமுக வைத்திருந்தும் அதன் மூலம் ஒரு சிறு நன்மையைக்கூட தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்களை காக்க இதுவரை செய்யவில்லை என்பது வரலாற்றுப் பெருந்துரோகம்.

ஆகவே, இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டுள்ள ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 27 கடற்றொழிலாளர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

திமுக அரசு கச்சதீவினை மீட்போம் என வழக்கமான வெற்று முழக்கத்தை வைக்காமல், இனியாவது உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கினை விரைவுப்படுத்தி கட்சத்தீவினை மீட்க உறுதியான நடவடிக்கை எடுத்து தமிழக கடற்றொழிலாளர்கள் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாண வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக கேட்டுக்கொள்கிறேன் என கூறப்பட்டுள்ளது.

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அடுத்த வருட ஆரம்பத்தில் தீர்வு: உறுதி என்கிறார் சுசில்

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணும் செயற்பாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார். தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் தீர்வுகள் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை உண்டு என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“தமிழ் அரசியல்வாதிகள் ஜனாதிபதி மீதும், அரசு மீதும் குற்றச்சாட்டுக்களை மாத்திரமே முன்வைத்து வருகின்றார்கள். ஆனால், அவர்கள் தீர்வுகளைக் காண்பதற்கு அரசுடன் இணைந்து செயற்படப் பின்னடிக்கின்றார்கள்.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை அரசு முன்வைத்த பின்னர் அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என்று தமிழ் அரசியல்வாதிகள் நிபந்தனையை முன்வைக்கின்றார்கள்.

தீர்வுகள் கிடைத்த பின் ஆதரவு எதற்கு? ஆதரவை வழங்கி அரசுடன் இணைந்து பயணித்தால்தானே தீர்வுகளை வென்றெடுக்க முடியும்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணும் செயற்பாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார்.

தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் தீர்வுகள் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை உண்டு. நாம் வாயால் சொல்வது செயலில் நடப்பது கடினம்தான்.

எனினும், இந்த விவகாரத்தில் ஜனாதிபதியும் அரச தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்கள். தமிழ் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்தால் அது மேலும் பலமாக இருக்கும் தீர்வுகளை நாம் விரைந்து வென்றெடுக்க முடியும்.’ என்றும் தெரிவித்தார்.

## வடக்கு- கிழக்கில் ஹர்த்தால்

இந்த வருடத்தில் இரண்டாவது கடையடைப்பு போராட்டத்துக்கான (ஹர்த்தால்) ஏற்பாடுகளில் தமிழ் தேசிய பரப்பில் இயங்கிவரும் கட்சிகள் ஈடுபட்டுள்ளனர். முல்லைத்தீவு நீதிபதி விவகாரம் மற்றும் நிலப் பறிப்பு, சிங்கள-பௌத்த மயமாக்கல், மேய்ச்சல் தரை விவகாரம் போன்ற விவகாரங்களுக்காக வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் இந்த கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை (20) நடைபெறவுள்ள இந்த கடையடைப்பு போராட்டத்துக்கு வடக்கு-கிழக்கிலுள்ள சிவில் அமைப்புகள், பொதுமக்கள், வர்த்தக சங்கத்தினர், பேருந்து உரிமையாளர் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் உட்பட அனைத்து பொது அமைப்புக்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி போராட்டத்திற்கு வலுச்சேர்க்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரான கடந்த 14 வருடங்களில் தமிழர் தேசம் பல நெருக்கடிகளையும், அடக்குமுறைகளையும்,அச்சுறுத்தல்களையும் சிங்கள கடும்போக்காளர்களாலும் அரசுகளாலும் எதிர்கொண்டுவந்திருக்கிறது. இந்நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் குறிப்பாக கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக ஆட்சியேற்ற காலத்துக்கு பின்னர் தமிழர் தேசம் மிகப்பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துகொண்டிருக்கிறது.குறிப்பாக என்றுமில்லாத அளவுக்கு நில அபகரிப்புகள்,சிங்கள-பௌத்த மயமாக்கல்,தமிழர்கள் மீதான அடாவடிகள்,அச்சுறுத்தல்கள் என நாளுக்கு நாள் மிக மோசமான ஒரு சூழலுக்குள் தமிழ் மக்கள் வாழவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில்,தமிழ் மக்களும் தமிழர் தேசமும் எதிர்கொள்ளும் ஆபத்து குறித்து தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகள் முன்னரைவிட அதிகமாக வேலை செய்ய வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால்,தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் தலைமைகள் முன்னெடுக்கும் இந்த கடையடைப்பு போராட்டங்களோ அல்லது மனித சங்கிலி போராட்டங்களோ தமிழர் தேசத்தின் மீட்சிக்கு பொருத்தமாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.இவ்வாறான போராட்ட (எதிர்ப்பு) வடிவங்கள் புளித்துப்போனவை. இந்த போராட்ட வடிவங்கள் மிக மிக பழமையான போராட்டங்கள்.இவ்வாறான போராட்டங்களால் சிங்கள தேசத்தையோ சர்வதேச சமூகத்தையோ ஆட்டங்காண வைக்கமுடியும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

இன்றுள்ள தமிழ் தலைமைகள் ‘நோகாமல்’ வேலை பார்க்க முயற்சிப்பதாகவே இவ்வாறான போராட்டங்கள் வெளிக்காட்டுகின்றன. தமிழர்களுடைய கடந்த கால போராட்ட வடிவங்கள் எவ்வாறாக இருந்தது என்பதற்கு வரலாறுகள் பல எம்முன் இருக்கின்றன.அந்த அடிப்படையில் சிங்கள தேசத்துக்கும் நோகாமல்,சர்வதேசத்துக்கும் நோகாமல் எங்களுக்கும் (தமிழ் தரப்புகள்) நோகாமல் ஒரு போராட்டத்துக்கு காலத்தையும் நேரத்தையும் செலவழிப்பதில் எந்த பயனும் இருப்பதாக தெரியவில்லை.

இன்று தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் ஆபத்துகளை சர்வதேசத்தின் முன் கொண்டு செல்வதற்கும் சிங்கள-பௌத்த பேரினவாதிகளுக்கு பெரும் தாக்கத்தினையும் சேதத்தினையும் ஏற்படுத்துவதான ஒரு போராட்ட வடிவமே தேவையாகும்.அதற்கு ஒரு திரண்ட மக்கள் சக்தியாக வடக்கு-கிழக்கு மக்களை திரட்டும் தேவைப்பாடு தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகளுக்கு அவசியமாகும்.அந்த திராணி அவர்களிடத்தில் இல்லையென்றால் பொது அமைப்புகள்,புத்திஜீவிகள் அதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.அதைவிடுத்து எவருக்குமே நோகாத போராட்டங்களை முன்னெடுத்துக்கொண்டு இருப்போமேயானால் தமிழருக்கு எதிரான அநீதிகள்-ஆபத்துகள் மேலும் மேலும் அதிகரிக்கவே வாய்ப்பிருக்கிறது.

ஆகவே அவசரமாக புதிய போராட்ட வடிவமொன்றுக்கு தமிழ் தலைமைகளும் தமிழ் மக்களும் தயாராவது தமிழருடைய இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும்.

## மயிலத்தமடு விவகாரத்துக்கு தீர்வு கிடைக்காவிட்டால் ...

மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர் பிரச்சினைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததைப்போன்று எதிர்வரும் ஓரிரு வாரங்களில் உரியவாறான தீர்வு வழங்கப்படாவிடின், தமது போராட்ட வடிவத்தை மாற்றி மேலும் வீரியத்துடன் முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனைகால்நடை வளர்ப்பு பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் நிலங்கள் பெரும்பான்மையின சிங்களவர்களின் குடியேற்றங்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறும் வலியுறுத்தி கடந்த சில மாதங்களாக அப்பகுதியில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இவ்விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், இலங்கைத் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், இவ்விவகாரத்துடன் தொடர்புடைய ஏனைய கட்டமைப்புக்களின் அதிகாரிகள், கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பின்போது மயிலத்தமடு, மாதவனை பிரதேச பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு உடனடியாக உரிய தீர்வை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணித்துள்ளார்.

இருப்பினும் ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துகொண்டு, போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்திக்கூறிய தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், அச்சந்திப்பில் பங்கேற்றிருந்த பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் இவ்விவகாரம் தொடர்பில் செயற்திட்ட விளக்கமொன்றை (Presentation) முன்வைத்ததாகவும், அது அப்பகுதியில் சட்டவிரோதமாகக் குடியேறியிருப்போரை நியாயப்படுத்தும் விதத்திலேயே அமைந்திருந்ததாகவும் சுட்டிக்காட்டினார். அதேபோன்று ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சராக இருந்தாலும்கூட, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் என்போர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுன சார்ந்தோராக இருப்பதனால், ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்படும் பாதுகாப்புசார் உத்தரவுகள் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதில் சந்தேகம் நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி மயிலத்தமடு, மாதவனை பிரதேசத்தில் எத்தனை பேர் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள் என்ற ஜனாதிபதியின் கேள்விக்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் ‘சுமார் 40 குடும்பங்கள்’ என்று பதிலளித்ததாகவும், அதனையடுத்து “அங்கு சுமார் 300 பேர் வரை குடியேற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றதே? அவ்வாறெனில் ஒரு குடும்பத்தில் 10 - 15 பேர் இருக்கின்றார்களா?” என ஜனாதிபதி மீண்டும் கேள்வி எழுப்பியதாகவும் சாணக்கியன் தெரிவித்தார்.

எனவே இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் அச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்த அதிகாரிகளில் பலர் பொய்யான விடயங்களையே கூறியதாக சுட்டிக்காட்டிய சாணக்கியன், இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வை வழங்குமாறு ஜனாதிபதி கூறினாலும், தீர்வு கிடைக்கும் வரை தாம் அதனை நம்பப்போவதில்லை என்றார்.

மேலும் எதிர்வரும் வாரம் வரை பொறுத்திருக்கப்போவதாகவும், அதற்குள் பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு உரியவாறான தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிடின் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டத்தின் வடிவத்தை மாற்றி, மேலும் வீரியத்துடன் முன்னெடுப்பதற்குத் உத்தேசித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# வடக்கு- கிழக்கு இணைப்பை தவிர்த்து விட்டு தமிழ்த்தரப்பு செயற்படுவது பெரும் ஆபத்து

## சிவாஜிலிங்கம் எச்சரிக்கை!

வடக்கு, கிழக்கு மாகாணம் கடந்த-17 ஆண்டுகளாகப் பிளவுபட்டிருக்கிறது. எனவே, வடக்கு- கிழக்கு இணைப்பைத் தவிர்த்து விட்டு தமிழ்த்தரப்புக்கள் தொடர்ந்தும் செயற்படுவார்களேயானால் அதனால் பல விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுமென தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



படுகொலை செய்யப்பட்ட கோப்பாய்த் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல சட்டத்தரணியுமான அமரர். அடலேறு மு.ஆலாலசுந்தரத்தின் 38 ஆவது ஆண்டு நிறைவு வணக்கமும் நினைவுப் பேருரை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (08.10.2023) திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் வேகமாகச் சிங்களக் குடியேற்றங்கள், முஸ்லீம்களின் ஆதிக்கங்கள் தொடர்ந்து வருகின்றன. முஸ்லீம்களுக்கு நாங்கள் எதிரானவர்களல்ல. ஆனாலும், அவர்களின் சிந்தனைகள் வேகமாகச் செல்கின்றன. தற்போது கிழக்கு மாகாணம் முழுவதும் 12 வயதிற்குட்பட்ட 51 வீதமான ஆண், பெண் பிள்ளைகள் முஸ்லீம் பிள்ளைகளாகவுள்ளனர். இன்னும் ஆறு வருடங்களில் அவர்கள் வாக்காளர்களாக மாறுகின்ற போது தமிழ்மக்களின் நிலை என்ன? இவ்வாறானதொரு நிலை ஏற்படும் போது திருகோணமலை, அம்பாறைப் பகுதிகளில் தமிழ் எம்பிக்கள் தெரிவாகாத நிலை உருவாகும் நிலை ஏற்படும். மட்டக்களப்பிலும் விகிதாசாரம் குறையும் நிலை உருவாகும்.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்து வைப்பதற்காகத் தலைவர் பிரபாகரன் சுதுமலையிலிருந்து இந்திய உலங்கு வானூர்தி மூலம் புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டுப் புதுடில்லி அசோக்கா ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டார். ஏனைய இயக்கத் தலைவர்கள் புதுடில்லியிலுள்ள சாம்ராட் ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டனர். இதன் போது அமரர். ராஜீவ்காந்தி வடக்கு- கிழக்கு தமிழ்மக்களின் தாயகப் பிரதேசமென்பதை நாங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். நீங்கள் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கூறிய போது நீங்கள் கிழக்கு மாகாணத்தில் ஓராண்டுக்குப் பின்னர் வாக்கெடுப்பெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தநிலை கிழக்கு மாகாணச் சிங்களக் குடியேற்றத்தால் வந்திருக்கிறது. எனவே, வடக்கு, கிழக்கு உடையும். ஆகவே, இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லையெனக் கூறிய போது ஒருபோதும் நாங்கள் இந்த வாக்கெடுப்பை நடாத்த விடமாட்டோம். நாங்கள் பார்த்துக் கொள்கின்றோமென இந்தியா கூறியதன் அடிப்படையில் தான் எல்லா இயக்கங்களும் ஆட்சேபனை அடிப்படையில் அதனை ஏற்றுக் கொண்டு ஆயுதக் கையளிப்பைச் சம்பிராதயபூர்வமாக மேற்கொண்டது.

அதன் பின்னர் தியாகதீபம் திலீபனின் உண்ணா நோன்பு, குமரப்பா புலேந்திரனின் உட்படப் பன்னிரண்டு பேரின் மரணங்கள் நடந்தன. இந்த இரு சம்பவங்களையும் இந்தியா தடுத்து நிறுத்தியிருந்தால் இந்திய அமைதிப் படையும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மோத வேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்காது.

2006 ஆம் ஆண்டு ஜேவிபி தொடுத்த வழக்கின் மூலம் வடக்கு- கிழக்கு இணைப்புச் செல்லாதென உயர்நீதிமன்றப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தீர்ப்பு வழங்கினார். அவரது தீர்ப்பில் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், 42 ஆம் இலக்க மாகாணசபைச்சட்டத்தின் கீழ் அருகருகாக இருக்கக் கூடிய இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் நாடாளுமன்றத்தில் இருக்கக் கூடிய சாதாரண பெரும்பான்மை மூலம் இணைக்கப்பட முடியும் என அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். ஏன் அதனை இந்தியாவால் செய்ய முடியாது போனது?

தற்போது நாங்கள் வெறுமனே மாகாணசபைத் தேர்தலை நடாத்துங்களெனக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். விக்னேஸ்வரன் ஐயா வடக்கு மாகாணத்திற்குப் பொல்லுடன் பொலிஸ் அதிகாரமிருந்தால் போதுமெனக் கூறுகின்றார். பொல்லுடன் பொலிசும் வரப் போவதில்லை. ஒன்றும் வரப் போவதில்லை.

வடக்கு- கிழக்கு இணைந்த தாயகத்தில் நாங்கள் எதனையும் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்று முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர்.அமிர்தலிங்கம் அன்றே தெளிவாகக் கூறினார். வடக்கு- கிழக்கு இணைந்த தாயகத்தைப் பற்றிப் பேரம் பேசலுக்கே இடமில்லையென விடுதலைப் புலிகளின் ஆலோசகராகவிருந்த அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

கடந்த-75 ஆண்டுகாலமாக சிங்களப் பௌத்த ஆட்சியாளர்கள் தீர்வு தொடர்பில் தமிழ்மக்களை ஏமாற்றி வரும் நிலையில் இலங்கைக்குள் நீதி இல்லை என்பது உறுதியாகி விட்டது. இந்நிலையில் சர்வதேச நீதி நோக்கியே தமிழ்மக்கள் முன்னகர வேண்டுமெனவும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

# டக்ளஸ் அமைச்சுப் பதவியை துறந்துவிட்டு எம்.பி.யாக இருப்பதே தமிழருக்கு சிறந்தது

## அமைச்சர் டக்ளஸுக்கு சாணக்கியன் ஆலோசனை

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் ஏதாவது நன்மை செய்வதாக இருந்தால் தன்னுடைய அமைச்சை இராஜினாமா செய்துவிட்டு வெறுமனே ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதே சிறந்தது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.



மட்டு ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் இந்திய இழுவைப் படகு விடயம் குறித்து பிரதமர் மற்றும் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் எதிர்மறையான கருத்துகள் தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் இந்திய இழுவை படகுகளுக்கு பாஸ் அடிப்படையில் அனுமதி வழங்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். அதே நேரம் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஒரு துளியேனும் இந்திய மீனவர்களுக்கு அனுமதியில்லை என்று தெரிவித்துள்ளார். ஆனாலும் அத்துமீறிய மீன்பிடி இடம்பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது. இதனை எவ்வறு பார்க்கின்றீர்கள்?

டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் இழுவைப்படகு இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதுமட்டுமலல்லாது அவருக்கு மாதமொன்றுக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் இலஞ்சம் கொடுப்பதாகவும் பாராளுமன்றத்திலே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தார். இவ்வாறு அவர் தொடர்பான விடயங்கள் இருக்கின்றன.

அந்த விடயங்களெல்லாம் ஒருபுறம் இருக்க டக்ளஸ் தேவானந்தா அவர்களை மீன்பிடி அமைச்சராக நியமித்ததற்கான காரணமே வடக்கு கிழக்கிலே இருக்கும் தமிழர்களுக்கும் தென்இந்தியாவில் இருக்கும் தமிழர்களுக்கும் முரண்பாடு வரவேண்டும், அதன் காரணமாக தென்இந்திய முதலமைச்சருக்கோ, அரசியல்வாதிகளுக்கோ இலங்கையில் வடக்கு கிழக்கிலே வாழும் தமிழ் மக்கள் மீதான எதிரான சிந்தனை வரவேண்டும் என்பதற்;காகவே திட்டமிட்ட வகையிலே டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்பது நான் அடிக்கடி சொல்லும் விடயம்.

கௌரவ அமைச்;சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உண்மையிலேயே வாயால் சொல்வது ஒன்று நடைமுறைப் படுத்துவது ஒன்று. அந்த அமைச்சிற்கு பொருத்தமில்லாத ஒருவர். அவர் மீனவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் ஏதாவது ஒரு நன்மை செய்வதாக இருந்தால் தன்னுடைய அமைச்சை இராஜினாமா செய்துவிட்டு வெறுமனே ஒரு பாராளுமன்ற உறுப்பினாகவோ அல்லது வேறு ஏதாவது அமைச்சுப் பொறுப்பை, எமது மாவட்டத்திலேயும் ஒரு திணைக்களம் கூட சுற்றுநிரூபம் வெளியிடப்படாத அமைச்சை வைத்திருக்கும் அமைச்சர்களைப் போல அவரும் ஏதாவது தன்னுடைய சலுகைகளை எடுக்கக் கூடிய வகையிலான அமைச்சைக் கேட்டெடுத்து பேசாமல் இருப்பதே பொருத்தம் என்று தெரிவித்துள்ளார்.

யாழ், வீரசிங்கம் மண்டபத்தில்
இம்மாதம் 21 ம் திகதி முதல் தீபாவளி தினம் வரை
இந்தியன் செலக்ஷனின்
தீபாவளி ஜவுளிக் கொண்டாட்டம்
பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், மற்றும் டொப், பாட்டி புறொக், சேட், ரீ சேட் டெனிம் ஜீன்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகளையும் இன்னும் மங்கையர் மனங்கவரும் ஆடைத் தெரிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம். .
விஷேட விலைக்கழிவு
டொப் 500/=
ரெடிமேட் சல்வார் 750/=
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
காலம்: 21-10-2023 முதல் தீபாவளி தினம் வரை
இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# யாழ். ஜனாதிபதி மாளிகையை தாரைவார்க்கக் கூடாது

யாழ்ப்பாணம் - கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை தென்னிலங்கையில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகை என்ற பெயரில் ஒப்படைக்க கூடாது என அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

கீரிமலை காங்கேசன்துறை வீதியில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் அச்சுற்றாடலில் அழிக்கப்பட்ட சைவ ஆலயங்கள், மடங்கள் தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் ஆறு திருமுருகன் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலை ஆதிசிவன் கோயில், சடையம்மா மடம், உச்சிப்பிள்ளையார் கோவில் போன்றவை இடிக்கப்பட்டு அச்சுற்றாடலில் கட்டப்பட்ட ஜனாதிபதி மாளிகை பயனற்று உள்ளது.

இந்த ஜனாதிபதி மாளிகையை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அல்லது இந்து சமயம் சார்ந்த நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும். ஆதிசிவன் கோயில் மடங்கள் இருந்த இடத்தை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதை விடுத்து தென்னிலங்கையில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகை என்ற பெயரில் இவற்றை ஒப்படைக்க கூடாது. இது தனியார் நிலங்களிலும் சைவ சமய நிறுவனங்களின் நிலங்களிலும் போரை பயன்படுத்தி கட்டப்பட்டது.

கடந்த 33 ஆண்டுகளுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பொதுமக்கள் போக முடியாமல் கடற்படையின் பொறுப்பில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது மிக வேதனையான விடயம். இப்பகுதியில் இருந்த சித்தர்களின் சமாதிகள் பல உடைக்கப்பட்டு விட்டன. இது நாட்டுக்கு கெடுதியானவை. எனவே இவற்றை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தென்னிலங்கை சார்ந்த வாணிப நிறுவனங்களுக்கு கையளிக்க கூடாது. இது திட்டமிட்ட அநியாய செயற்பாடு. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

காங்கேசன்துறை பலாலி வீதியில் சிவபூமி அறக்கட்டளைக்கு உரித்தான சுக்கிரவார திருகோணசத்திரம் இராணுவ நலன்புரிச்சங்கம் இயங்குகின்ற தல்செவன ஹோட்டல் தமது பயன்பாட்டிற்கு வைத்துள்ளார்கள்.

நூற்றியாறு பரப்பு கொண்ட சைவ சமய நிறுவனத்தின் மடத்தை அழித்து ஹோட்டல் பயன்பாட்டுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். இது நீதியற்ற செயல். உடனடியாக தல்செவன ஹோட்டலின் பயன்பாட்டில் உள்ள சமய நிறுவனத்தின் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.











தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை!

இப்பத்திரிகை 18.10.2023 அன்று அகரவ் பப்ளிசிங் & மீடியா பிறின்டிங் ஹவுஸ் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.